பக்கங்கள்: 16

# காலைக்கதிர்
Kālaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 23 வெள்ளிக்கிழமை 05.06.2020 கதிர் 212

**இது ரகசியம் அல்ல!**

கோட்டாபய அரசு ஒருபுறம் இராணுவமயப்படுத்தலையும், பௌத்த, சிங்கள மயப்படுத்தலையும் தீவிரமாக முன்னெடுக்கின்றது என்றால் மறுபுறம், நிதி மற்றும் கொள்கை விடயங்களில் தன் சொற்படி நடக்காத அதிகார வர்க்கத்தைப்

பக்கம் 02

## — கட்டுநாயக்க விமான நிலையத்தில் —

# பி.சி.ஆர். சோதனையை நிராகரித்த அமெ.தூதரக அதிகாரியால் சர்ச்சை

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் போர்க்கொடி

கொழும்பு, ஜூன் 05

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் இராஜதந்திர அதிகாரி ஒருவர் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனையை நிராகரித்துவிட்டு நாட்டுக்குள் பிரவேசித்துள்ளார்.

4

# இராணுவ ஆட்சியில் அரசு! இலங்கைக்கே பேராபத்து!!

## சஜித் அணி பகிரங்க எச்சரிக்கை

சுயாதீனமாக இயங்கிவரும் அரச துறையை இராணுவத்தின் தலைமைத்துவத்திற்கு கீழ் அரசு கொண்டு வந்துள்ளது. இது அரசமைப்புக்கு முரணான செயற்பாடாகும்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஸ்மன் கிரியெல்ல குற்றஞ்சாட்டியுள்ளார்.

அரசு படிப்படியாக இராணுவ ஆட்சிக்கு

2



**வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு பி.சி.ஆர். சோதனை மிகவும் கட்டாயம்**

## ஜனாதிபதி கோட்டாபய பணிப்புரை

கொழும்பு, ஜூன் 05

வெளிநாடுகளில் இருந்து வருகை தருவோரின் பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கைகளை விமான நிலையத்திலேயே பெற்று அவர்களைத்

4

## கடத்தப்பட்ட குழந்தை மீட்பு கடத்திய தந்தையார் கைது!

வடமராட்சி, ஜூன் 05

வடமராட்சி, அல்வாய் பகுதியில் தனது இரண்டு வயது மகளைக் கடத்திய தந்தை பொலிஸாரால் நேற்று மாலை கைது செய்யப்பட்டார். குழந்தை மீட்கப்பட்டு தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

2

## வேம்பிராயில் வெடிபொருள்

யாழ்ப்பாணம், ஜூன் 05

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வேம்பிராய் பகுதியில் வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

மலசலகூடத்துக்கான குழி அகழப்பட்டபோது வெடிபொருள்கள் காணப்பட்டுள்ளமை

2

## சஜித் அணிக்கு மக்கள் ஆணை ஒருபோதும் கிடைக்கமாட்டாது

### மஹிந்த அணி சொல்கின்றது

கொழும்பு, ஜூன் 05

ஐக்கிய மக்கள் சக்தியினர் அடிப்படைவாதிகளின் ஆதரவுடன் ஆட்சியைக் கைப்பற்ற முயற்சிக்கின்றார்கள். முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு பெரும்பாலான மக்களின் ஆதரவு ஒருபோதும் கிடைக்காது. பலவீனமான

2

## ஹூல் மீது அழுத்தங்கள் வேண்டாம்! சுதந்திரமாகச் செயற்பட விடுங்கள்!!

### ரிஷாத் வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 05

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசியர் ரட்ண ஜீவன்ஹூல் மீது, அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். சுயாதீன ஆணைக்குழு உறுப்பினர் மீதான இவ்வாறான செயற்பாடுகள் உடனடியாகக் கைவிடப்படவேண்டும்.

- இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் வலியுறுத்தினார்.

பேராசிரியர் ஹூலின் சுயாதீனத் தன்மையைக் கேள்விக் குறியாக்கும் வகையில் இவ்வாறு செயற்படுவது, ஜனநாயகத்தைக் கேலிக்குரியதாக்குகின்றது

2

## ஞாயிறுக்கிழமை சில இடங்களில் தேர்தல் ஒத்திகை

குறிப்பிட்ட சில கிராமங்களைத் தேர்ந்தெடுத்து தேர்தல் ஒத்திகையொன்றை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடத்தவுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்ததேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று உள்ள நிலைமையில் சமூக இடைவெளியை கடைப்பிடித்து எவ்வாறு தேர்தலை நடத்தலாம் என்பதைக் கண்டறிய இவ்வாறு ஒத்திகை நடத்தப்படவுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

## ராஜபக்ஷ அரசை வீட்டுக்கு நாம் அனுப்பியே தீருவோம்

### சஜித் நேற்றுச் சூளுரை



கொழும்பு, ஜூன் 05

நாட்டு மக்களின் ஆசீர்வாதத்துடன் எதிர்வரும் பொதுத் தேர்தலில் நாங்கள் வெற்றிகொண்டு ராஜபக்ஷ அரசை வீட்டுக்கு அனுப்பிவைப்போம்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: -

ராஜபக்ஷ அரசுக்கு கடந்த வருடம் நவம்பர் மாதக் காலப்பகுதியில் இந்த நாட்டு மக்கள் மீது அதிகமான அக்கறை இருந்தது. இந்த அக்கறை கடந்துள்ள இந்த ஏழு மாதகாலத்தில் இருப்பதாகத் தெரியவில்லை.

2

## இராணுவ ஆட்சியில் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வித்திட்டு வருகின்றது எனவும், இது எதிர்காலத்தில் இலங்கைக்குப் பேராபத்தை ஏற்படுத்தும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: -

அரசமைப்பின்படி அரச சேவையானது சுயாதீனமாக இயங்கவேண்டிய துறையாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தநிலையில் பாதுகாப்புச் செயலாளர், பதில் பொலிஸ்மா அதிபர், இராணுவத் தளபதி உள்ளிட்ட 13 இராணுவத்தினரைக் கொண்ட ஜனாதிபதி செயலணியின் ஆணைக்கமைய அரசதுறை இயங்க வேண்டும் என்று குறிப்பிட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இராணுவ ஆட்சியை முன்னெடுப்பதற்கான திட்டங்களில் ஒன்றாகவே இதனைக் கருத முடிகின்றது. அரச துறையினர் என்றுமே இராணுவத்தினரையும் விட உயர்மட்டத்தில் வைத்துப் பார்க்கப்பட்டு வருபவர்கள். இவர்களை இன்று இராணுவத்தினரின் ஆணைக்கு அமைவாக செயற்படுமாறு இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு செயற்படாவிட்டால் அவர்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவிக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது எதிர்காலத்தில் பெரும் அனர்த்தத்தை ஏற்படுத்தும்.

ஒரு நாடு, பொதுச் சட்டம் என்று கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்தவர்கள் அதனை முறையாகப் பின்பற்றுகின்றார்களா? தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் சட்டம் எல்லோருக்கும் சமமான முறையில் செயற்படுத்தப்படுகின்றதா? நாட்டு மக்களுக்கு ஒருவகையிலும், ஆட்சியாளர்களுக்கு இன்னொரு வகையிலும் இந்தச் சட்டம் செயற்படுவதை அண்மையில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இவ்வாறு இந்தச் சட்டங்கள் மீறப்பட்டபோது கொரோனாவைரஸ் பரவலைத் தடுப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணியில் உறுப்பினர்கள் தலைமறைவாகினர். தொலைக்காட்சியில் முன்னால் வந்து நாட்டு மக்களுக்கு பல்வேறு உத்தரவுகளை விடுத்து வந்த அவர்கள், அந்தக் குறிப்பிட்ட தினங்களில் எங்கிருந்தார்கள் என்றுகூட தெரிந்துக்கொள்ள முடியாமல் இருந்தது - என்றார்.

## சஜித் அணிக்கு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசை மக்கள் இனி ஒருபோதும் தோற்றுவிக்கமாட்டார்கள்.

- இவ்வாறு மஹிந்த அணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

ஐக்கிய தேசியக் கட்சியை மக்கள் முழுமையாகப் புறக்கணித்து விட்டார்கள். ஐக்கிய மக்கள் சக்தியினருக்கு மக்கள் ஆணை ஒருபோதும் கிடைக்காது.

கடந்த வருடம் ஏப்ரல் 21 ஈஸ்டர் தினக் குண்டுத்தாக்குதலுடன் தொடர்புடைய அடிப்படைவாதிகளின் ஆதரவுடன் ஆட்சியைக் கைப்பற்ற முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ முயற்சிக்கின்றார்.

பெரும்பாலான மக்களின் ஆதரவு ஐக்கிய மக்கள் சக்தியினருக்குக் கிடைக்காது. நல்லாட்சி அரசைப் போன்று பல வீனமான அரசை மக்கள் இம்முறை விரும்பமாட்டார்கள்.

பொதுத்தேர்தல் வெகுவிரைவில் நடத்தப்படும். மேலும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி பலமான அரசை நிச்சயம் ஸ்தாபிக்கும் - என்றார்.

## ராஜபக்ஷ அரசை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மக்கள் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்ற நிலையில் அரசு அவர்களுக்கான எந்தவித சலுகைகளையும் பெற்றுக் கொடுப்பதாகத் தெரியவில்லை.

அரசுக்குத் தற்போது நாட்டு மக்களை விட கடற்கரையோர வேலைத்திட்டங்கள், புதிய பாதைகள் அமைத்தல், நெடுஞ்சாலைகள் அமைக்கும் வேலைத் திட்டம், கிரிக்கெட் அரங்குகள் போன்றனவே முக்கியமான விடயங்களாக இருக்கின்றன. தங்களுக்குக் காசு கிடைக்கக்கூடிய செயற்பாடுகள் தொடர்பிலே ஆளும் தரப்பினர் ஆர்வமாக இருக்கின்றனர்.

இன்று நாட்டு மக்கள் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒழுங்கான வருமானம் இன்றி, உணவுத் தட்டுப்பாட்டுக்கு மத்தியில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் போஷாக்குக்காக அரசால் வழங்கப்பட்டு வந்த திரிபோஷா தயாரிப்பு தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

திரிபோஷாவைத் தயாரிப்பதற்குத் தேவையான பொருள்கள் இல்லை என்று திரிபோசா உற்பத்தி தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது. அரசின் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் வெறுப்புற்று இருக்கின்றனர்.

தொடர்ந்தும் தங்களது பைகளை நிரப்பிக் கொள்வது தொடர்பிலே சிந்தித்துக் கொண்டிருக்காமல் ஜனாதிபதி தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசு நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் நாட்டு மக்களின் ஆசீர்வாதத்துடன் எதிர்வரும் பொதுத் தேர்தலில் நாங்கள் வெற்றிகொண்டு ராஜபக்ஷ அரசை வீட்டுக்கு அனுப்பிவைப்போம் - என்றார்.

## கடத்தப்பட்ட குழந்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்றிரவு வரை பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த அவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்படலாம் என்று தமக்குத் தெரிவிக்கப்பட்டதாக கடத்தப்பட்ட குழந்தையின் தாயார் தெரிவித்தார்.

முன்னதாக நேற்றுமுன்தினம் இரவு குழந்தை உணவருந்திக் கொண்டிருந்த சமயம் வீட்டுக்கான மின் விநியோகத்தைத் துண்டித்துவிட்டு வீட்டுக்குள் நுழைந்த சிலர் குழந்தையைக் கடத்திச் சென்றுவிட்டனர் என்று தாயார் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

குழந்தையின் தாயும் தந்தையும் பிரிந்து வாழ்ந்துவரும் நிலையில் குழந்தை தாயுடனேயே வாழ்ந்து வருகின்றது.

குழந்தை கடத்தப்பட்டது குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து தாயின் அலைபேசிக்கு குழந்தையின் தந்தையின் அலைபேசியில் இருந்து அனுப்பப்பட்ட குறுந்தகவலில் குழந்தை தன்னுடனேயே இருப்பதாகவும் குழந்தை வேண்டுமென்றால் சாவகச்சேரிக்கு வருமாறும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நேற்றுக் காலை தாயார் இந்தக் குறுந்தகவல் குறித்துப் பொலிஸாருக்குத் தகவல் தந்தார்.

நீண்ட தாமதத்தின் பின்னர் நடவடிக்கை எடுத்த பொலிஸார் சாவகச்சேரியில் குழந்தையின் தந்தை வரச்சொன்ன இடத்திற்குத் தாயுடன் சென்று குழந்தையை மீட்டமையுடன் தந்தையையும் கைது செய்தனர்.

அதற்கு குழந்தையை ஒப்படைப்ப தாயின் குழந்தையின் தாயுடன் தான் சேர்ந்து வாழ்வதற்கு தனது மாமியாரும் மாமனாருமே தடையாக இருக்கின்றனர் என்று கடிதம் எழுதித் தருமாறு குழந்தையின் தந்தை மிரட்டியுள்ளார்.

இதையடுத்து அப்படியொரு கடிதத்தை எழுதிக்கொடுத்துவிட்டு குழந்தையை மீட்குமாறு பொலிஸார் தாயாருக்கு அறிவுறுத்தினர். அதற்கு மறுத்த தாய், தனது மகள் கடத்தப்பட்டமை தொடர்பில் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கத் தயங்குகின்றனர் என்ற விடயத்தை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அவலுகத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

மனித உரிமைகள் ஆணைக்குழு இந்த விடயத்தில தலையிட்டதை அடுத்து தந்தையைக் கைது செய்து நெல்லியடிக்குக் கொண்டு வந்த பொலிஸார், குழந்தையை நேற்றிரவு தாயாரிடம் ஒப்படைத்தனர்.

## வேம்பிராயில் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

இதனை அடுத்து சாவகச்சேரி நீதிமன்றத்தின் அனுமதியுடன் இன்று அந்தப் பகுதியில் அகழ்வை மேற்கொள்ள கொடிகாமம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## ஹூல் மீது அழுத்தங்கள் வேண்டாம்! ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பேராசிரியர் ஹூல் நேர்மையாகப் பணிபுரிபவர். அவரது நேர்மைத் தன்மையும் சுயாதீனச் செயற்பாடுகளும் பல்வேறு சந்தர்ப்பங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவருக்கு தேவையற்ற அழுத்தங்களையும், நிர்ப்பந்தங்களையும் பிரயோகிப்பது ஆரோக்கியமானதல்ல. எனினும், இவ்வாறான அழுத்தங்களுக்கு அவர் இதுவரையில் அடிபணியாமல், நேர்மையாகத் தமது கருத்துக்களை முன்வைப்பது வரவேற்கத் தக்கது.

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினரான ஹூல் மீது, வீணான அபாண்டங்களையும் பொய்யான, சோடிக்கப்பட்ட அவதூறுகளையும் பரப்பி வருவது, ஜனநாயக விழுமியங்களுக்கு ஏற்புடையதல்ல.

இதேவேளை, வெளிநாட்டிலிருந்து வந்த அவரது மகள், தனிமைப்படுத்தல் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளரும் இராணுவத் தளபதியும் சான்றிதழ் வழங்கியுள்ள நிலையிலும், அவரது தந்தையான ஹூலை 21 நாள்கள் தனிமைப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டனர்.

அதுமாத்திரமின்றி, பேராசியர் ஹூல் பக்கச்சார்பாகச் செயற்படுகின்றார் என்றும் குற்றஞ்சாட்டினர். இந்த நிலையில், அவரை இலக்குவைத்து, தனிப்பட்ட ரீதியில் அழுத்தங்கள் மேற்கொள்வது கைவிடப்பட வேண்டும்.

சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவரை, சுதந்திரமாக

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பந்தாடவும் பின் நிற்கவில்லை.

அந்த வகையில் பல நூறு பில்லியன் டொலர் திட்டம் ஒன்றில் ஆட்சி அதிகாரத் தரப்பின் இசைவுக்காகச் செயற்படுவது தவறு என்று கண்டு கொண்ட தகவல் தொழில்நுட்பத் துறையின் கலாநிதி ஒருவர் அரசின் முக்கிய சபை ஒன்றின் பணிப்பாளர் பதவியைத் தூக்கி எறிந்து விட்டு விலகியமை குறித்து நேற்று இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தேன். எந்தத் தரப்பு அந்த விடயத்தைத் தவறாது கவனிப்பது நல்லது என்று நான் கருதினேனோ அந்தரப்பின் கண்ணில் எனது எழுத்துத் தட்டுப்பட்டுவிட்டதாகவே தகவல். எது, எப்படி என்றாலும் நல்லது நடந்தால் சரிதான்.

அது போன்ற இன்னொரு விடயத்தை இன்று வாசர்களுடன் பகிர விரும்புகிறேன்.

நாட்டின் முக்கிய நிதிக் கையாளுகை முகவர் அமைப்பு மத்திய வங்கிதான். அது நம் எல்லோருக்கும் தெரிந்ததே.

இந்த மத்திய வங்கியை இயக்குவது – வழி நடத்துவது – நாணயச் சபை.

இந்த சபைக்கு ஐந்து பணிப்பாளர்கள். அதில் இருவர் பதவி வழி உறுப்பினர்கள். ஒருவர் மத்திய வங்கி ஆளுநர். மற்றையவர் திறைசேரிச் செயலாளர். மற்றைய மூன்று பேரும் வெளியில் இருந்து நியமிக்கப்படுபவர்கள்.

முன்னர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது மத்திய வங்கி ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் பதவி வகித்தார். அப்போது நடந்த பல திருகுதாளங்கள் எல்லோருக்கும் தெரிந்தவைதான்.

நாட்டைப் பெரும் நஷ்டத்தில் கொண்டு போய் விழுத்திய – வெளிநாடுகளில் இருந்து எரிபொருள் கொள்வனவு செய்வதற்கு செய்து கொள்ளப்பட்ட – 'ஹெட்ஜிங்' ஒப்பந்தம், ஊழியர் சேமலாப நிதியத்தின் வைப்புப் பணத்தை, பங்குச் சந்தையில் முதலீடு செய்ய வைத்தமை என்று பல குளறுபடிகள் அரங்கேறியமை தெரிந்ததுதான்.

அதுபோன்ற நிலைமைக்கு மீண்டும் ஆயத்தங்கள் நடக்கின்றன போலும்.

மஹிந்தவின் காலத்தில் திறைசேரியின் செயலாளராக இருந்த பி.பீ.ஜயசுந்தரதான் இப்போது ஜனாதிபதியின் செயலாளர். அவர் அந்தப் பதவியில் இருந்தபடி பிரதமரின் கீழ் இருக்கும் நிதி அமைச்சையும் தம்மிஷ்டப்படி கையாண்டு வருகின்றார், தேவையில்லாமல் நிதி அமைச்சு விடயங்களில் தலையிட்டுக் கையாளுகின்றார் என்றும் குற்றச்சாட்டு.

இனி விடயத்துக்கு வருவோம்.

நாணய சபையின் பணிப்பாளர்கள் மூவர் வெளியில் இருந்து நியமிக்கப்படுபவர்கள். ஆறு ஆண்டு காலம் பதவி வகிப்பவர்கள்.

இந்த மூவரில் நிஹால் பொன்சேகா கொழும்பு பங்குச் சந்தையின் முன்னாள் தலைவர். புகழ்பெற்ற வங்கியாளர். 2016 இல் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டவர். இன்னும் இரண்டு ஆண்டுகாலம் இப்பதவியில் நீடிக்க வேண்டியவர்.

இரண்டாமவர் கலாநிதி டுஷ்னி வீரக்கோன். கொள்கைக் கல்விக்கான நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராக இருந்தவர். இந்தப் பெண்மணி 2019 இல் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டவர். இப்பதவியில் இன்னும் ஐந்து வருடங்கள் நீடிக்க வேண்டியவர்.

மூன்றாவது பணிப்பாளர், கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் நியமிக்கப்பட்டவர். அவர் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜெயவர்த்தனா.

இந்த மூவரில் முதல் இருவரும் – அவர்களின் பதவிக் காலம் இன்னும் இருக்கும் போதும் – தமது பதவிகளில் இருந்து இராஜினாமாச் செய்திருக்கின்றனர்.

ஆட்சியாளர்களின் அழுத்தமே அவர்கள் இராஜினாமாவுக்குக் காரணம் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

கப்ரால் காலம் போல மீண்டும் இப்போது மத்திய வங்கியை தம்மிஷ்டப்படி நடத்துவதற்கு இந்த இருவரும் இடைஞ்சல் என்று கருதி அவர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர் என்று தகவல்.

இனி என்ன? தங்களின் இரு செம்பு காவிகளை அந்தப் பதவிக்கு நியமித்து விட்டால் மத்திய வங்கியை விருப்பப்படி கையாளலாம் என்பது ஆட்சித் தரப்பாரின் கணிப்பு.

மத்திய வங்கியை ஒட்டி காலங்காலமாகக் கட்டவிழும் பல்வேறு திருவிளையாடல்களை தமக்கேற்றபடி தொடர்வதற்கு வசதியாக ஒரு நாணயச்சபையை அமைப்பதற்கு வாய்ப்புக் கிட்டிவிட்டது என்று ஆட்சியாளர்கள் இனி மகிழலாம்.

கடவுள் வந்தாலும் இந்த நாட்டைக் காப்பாற்ற முடியாது என்பதுதான் உண்மை போலும்...!

– மின்னல் –

# தேர்தல் திகதியை நிர்ணயிக்க முன் கட்சிகளின் கருத்தையும் அறியுங்கள்

## அசாத் சாலி வலியுறுத்து



கொழும்பு, ஜுன் 05

**தேர்தலுக்கான திகதியை நிர்ணயிப்பதற்கு முன்னர், அரசியல் கட்சிகளின் கருத்துக்களையும் தேர்தல் ஆணைக்குழு பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் முன்னாள் ஆளுநருமான அசாத் சாலி தெரிவித்தார்.**

தேர்தல் தொடர்பில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் தெரிவித்தாவது:-

சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவிடம், தேர்தலைச் சுகாதார முறையில் நடத்துவது தொடர்பில் வழிகாட்டியொன்று கையளிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும், தேர்தலில் வாக்காளர்களே வாக்களிக்க வேண்டும்.

அவர்களின் மன நிலையை அவர்கள் சார்ந்த அரசியல் கட்சிகளும், பிரதிநிதிகளும், அரசியல்வாதிகளுமே நன்கறிவர். எனவேதான் கட்சிகளின் கருத்துக்களும் கேட்டறியப்பட வேண்டும் என்கிறேன்.

கொரோனா வைரஸை விட மிகவும் மோசமாக தேர்தல் வைரஸ் உருவெடுத்துள்ளது. ஆளுங்கட்சி ஜுன் 20ஆம் திகதி, எப்படியாவது தேர்தலை நடத்த வேண்டுமெனவரிந்துகட்டிக்கொண்டு நின்றது. பெரிய எதிர்பார்ப்புடன் இருந்தது.

எனினும், ஆளுங்கட்சிக்காரர்களைவிட ஏனைய அனைத்துக் கட்சிகளும், இது தேர்தல் காலம் அல்ல எனவும் மக்களை கொரோனா வைரஸுக்கு காவுகொடுத்து, பலிக்கடாவாக்க முடியாதெனவும் வெளிப்படையாக தெரிவித்தன.

ஆனால், அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எப்படியாவது எடுத்துவிட வேண்டுமென்ற நோக்கில், தேர்தலை வைக்குமாறு அடம்பிடித்து நின்றது. ஆளுங்கட்சி அரசியல்வாதிகள், தேர்தல் திணைக்களத்தின் மீதும் அதன் உறுப்பினர்கள் குறிப்பாக, ரத்னஜீவன் ஹுலைக் கண்டபடி திட்டத் தொடங்கினர்.

19ஆவது திருத்தத்தில் உருவாக்கப்பட்ட தேர்தல்கள் ஆணைகுழுவின் சுயாதீனத்தன்மைக்கு வேட்டுவைக்கும் வகையில், தினமும் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் உட்பட ஆளுங்கட்சி அரசியல்வாதிகள் ஊடகங்களில் கருத்துக்களைக் காட்டினர்.

உச்ச நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட மனுக்களை ஏற்றுக்கொள்வதா? இல்லையா? என்ற விசாரணையின் ஆரம்ப நாளன்றே, சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு ஜுன் 20ஆம் திகதி தேர்தலை நடத்தமாட்டோம் என அறிவித்தது. இது அரசுக்கு ஏமாற்றமாகவே அமைந்தது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுவிட வேண்டுமென்ற எண்ணத்திலிருந்த அரசு, தற்போதைய நிலையில் சாதாரண பெரும்பான்மையைக் கூட பெற முடியுமா? என்ற ஏக்கத்திலேயே இருக்கின்றது.

தேர்தலை நடத்துவது தொடர்பில், சுகாதார அதிகாரிகள் நீதிமன்றத்துக்கு ஒன்றும் ஊடகங்களில் வேறொன்றுமாக் க கருத்துத் தெரிவிப்பதை காண்கிறோம். ஆளுங்கட்சிகூட இப்போது பிச்சை வேண்டாம் நாயை பிடி என்ற நிலைக்கே வந்துள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் மனுக்கள் நிராகரித்த அறிவிப்பை, ஏதோ தேர்தலில் வெற்றிபெற்றது போன்ற முடிவாக எடுத்துக்கொண்டு, பட்டாசுகளைக் கொளுத்தி வெற்றிக்களிப்பிலே கொண்டாடியதை நாம் என்னவென்றுதான் சொல்வது? - இவ்வாறு அவர் கூறினார்.

## விமான நிறுவனங்களின் பிரதிநிதிகள் மத்தள விமான நிலையத்துக்கு விஜயம்







மத்தள விமான நிலையத்தை ஒரு கவர்ச்சியான பிரதேசத்தை கொண்ட சுற்றுலா இலக்காக மாற்ற வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தோடு நேற்று முன்தினம் புதன்கிழமை விமான நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று விமனநிலையத்திக்கு விஜயம் மேற்கொண்டது.

இந்த விஜயமானது இலங்கைக்கு விமான சேவையை நடத்தும் விமான நிறுவனங்களூடாக ஆசிய மற்றும் முக்கிய ஐரோப்பிய நாடுகளிற்கு புதிய விமான வழித்தடங்கள் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டது.

தற்போதைய அரசாங்கம் மத்தள விமான நிலையத்தை அபிவிருத்தி செய்து மீண்டும் விமான நடவடிக்கைகளை தொடங்குவதற்கான முழு முயற்சிகளையும் இலங்கை விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் சபையின் ஊடாகச் செயற்படுத்தி வருகின்றது.

அச்சபையின் இயக்குநர் ஹென் சுமனசேகர அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றமையோடு களநிலைமைகளையும் சாத்தியக்கூறுகளையும் எடுத்து விளக்கினார்.

## முந்தலில் குழுச் சண்டை வானத்தை நோக்கிச் சூடு

முந்தல் - கிரிமட்டாவ பகுதியில் நேற்று அதிகாலை இரு குழுக்களுக்கிடையே மோதல் இடம்பெற்றுள்ளதுடன், சந்தேகத் தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு இரு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற இந்த மோத லில் வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மதுபோதையிலிருந்த ஒருவரே தனது தோட்டத்தில் பாதுகாப்புக்காக வைத்திருந்த துப்பாக்கியால் இவ்வாறு வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியுள்ளார் என்பது முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாகவும் முந்தல் பொலிஸார் கூறினர்.

சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படும் பகுதிக்கு நேற்றுக் காலை விஜயம் செய்த முந்தல் பொலிஸாரும், புத்தளம் மாவட்டக் குற்றப்புலனாய்வுப் பொலிஸாரும் அந்தப் பகுதியில் சோதனைகளை மேற்கொண்டனர்.

குறித்த குழு மோதலில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவர் எனக் கூறப்படும் நபர் ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய் துள்ளனர் எனக் குறிப்பிட்ட பொலிஸார், இரு குழுக்களுக்கிடையேஇடம்பெற்றமோதல் சம்பவம் தொடர் பில் முந்தல் பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோ தகர் அசித லக்ருவன் தலைமையில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனவும் மேலும் தெரிவித்தனர்.

## பூசகர் வீட்டில் கசிப்பு ஏழாலையில் சம்பவம்

யாழ். ஏழாலை பகுதியில் சட்டத்துக்கு புறம்பாகக் கசிப்பை வீட்டுக்குள் மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் பூசகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துனர்.

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ஏழாலை பகுதியில் வீட்டின் குளியலறையில் 27 லீற்றர் கசிப்பை மறைத்து வைத்திருந்த பூசகர் ஒருவரே நேற்று கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட சந்தேக நபர் அடுத்த வாரம் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் எனத் தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதே பூசகர் இதே குற்றச்சாட்டில் ஏற்கனவே நீதிமன்றினால் தண்டம் அறவிடப்பட்டு விடுவிக்கப்பட்டவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ஜனாதிபதியின் கையெழுத்தையிட்ட சந்தேகநபர் வசமாகச் சிக்கினாராம்

போலியான ஆவணங்களில் ஜனாதிபதியின் கையெழுத்திட்ட குற்றச்சாட்டில் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனக் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வங்கிச் சேவையிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டிருந்த குமார எனும் நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கொடுப்பனவு மற்றும் பதவியுயர்வுடன் மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளும்படி குறிப்பிட்டு ஜனாதிபதியின் கையெழுத்துடன் கூடிய கடிதமொன்று இலங்கை வங்கியின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் விசாரணைக்காக வங்கியின்தலைமையகத்திற்குஅழைக்கப்பட்ட அவர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், கடிதத்தை தயாரிக்கப் பயன்படுத்திய மடிக்கணினி மற்றும் ஏனைய உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

நீதிமன்றில்முற்படுத்தப்பட்டஅவரை எதிர்வரும் ஜுன் மாதம் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## டிராக்டரில் பயணித்தவர் தவறி விழுந்து உயிரிழப்பு

கிளிநொச்சி - முறிப்பு பகுதியில் நேற்றிரவு உழவு இயந்திரத்தில் பயணம் செய்த ஒருவர், தவறி வீழ்ந்து, உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி 8 ஆம் வாய்க்கால் பகுதியை சேர்ந்த 41 வயதுடைய, நல்லதம்பி யோகேஸ்வரன் என்ற இரு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

உழவு இயந்திரத்தின் முன்பகுதியில் சாரதிக்கு அருகில் பயணம் செய்த போதே, இந்த நபர் தவறி வீழ்ந்து சக்கரங்களுக்குள் சிக்கிக் கொண்டார்.

இதையடுத்து, கட்டுப்பாட்டை இழந்த உழவு இயந்திரம் வீடொன்றின் வேலியை, பிய்த்துக் கொண்டு, கோழி கூட்டின் மீது மோதியுள்ளது. இதனால், கூட்டிலிருந்த 30 கோழிகளும் உயிரிழந்திருக்கின்றன என்று கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தை அடுத்து தப்பியோடித் தலைமறைவாகியுள்ளார் என்று கூறப்படுகின்றத உழவு இயந்திர சாரதியைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் -சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கருத்துருவாக்கிகள் மீது நீளும் அரூபக் கரங்கள்

இலங்கை உட்பட பல நாடுகளில் தற்போதைய சூழ்நிலையில் கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிசெல் பாச்செலெட் அம்மையார் கவலை வெளியிட்டிருக்கின்றார்.

போலியான செய்திகள் மற்றும் இணைய ஊடகங்கள் சம்பந்தமான சட்டங்களே கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

கொரோனா கட்டுப்படுத்தல் என்ற பெயரில் பல நாடுகள் தணிக்கை நடவடிக்கைகளை மேலும் இறுக்கியிருக்கின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

கொரோனா வைரஸ் பரம்பல் தொடர்பில் தங்களுக்கு அதிருப்தி தரும் செய்திகளை – தகவல்களை – பத்திரிகைகளில் அல்லது சமூக ஊடகங்களில் வெளியிட்டமைக்காகப் பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று அவர் தெரிவித்திருக்கின்றார். உண்மைதான். இலங்கையில் ஒரு பெண் உட்பட ஐந்து பேர் சமூக வலைத்தளங்களில் தவறான செய்திகளை வெளியிட்ட சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர் என்று ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தன.

இலங்கையில் இனி நிலைமை இன்னும் மோசமாகக் கூடிய ஆபத்து.

இலங்கையைப் பொறுத்தவரை இது கொரோனா காலம் மட்டுமல்ல. அதையும் தாண்டி பொதுத் தேர்தல் காலம். இப்போதுதான் இந்தக் கருத்தாதிக்க நிலைநிறுத்தல் என்ற தந்திரம் முக்கியத்துவம் பெறுகின்றது.

கருத்து விலங்கிட்டு மனித மனங்களைத் சிறை கொள்வது ஒரு நுட்பமான தந்திர அடக்குமுறை. உலகெங்கும் அடக்குமுறையாளர்கள் இந்தக் கருத்தாதிக்க யுக்தியையே கடைப்பிடிக்கின்றார்கள்.

அதற்கு இலங்கையின் இப்போதைய ஆட்சியாளர்களும் விதி விலக்கல்லர்.

அடிமை கொண்ட மக்களின், கிளர்ச்சி எண்ணத்தை நசுக்க, புரட்சிச் சிந்தனைகளை முளையிலேயே கிள்ளி எறிய, விடுதலை உணர்வை அடக்க, அடிமைத் தளையிலே அவர்களை நிரந்தரமாக மூழ்கடிக்க, இந்தக் கருத்தாதிக்க மேலாண்மையையே ஆட்சியாளர்கள் மேற்கொள்வார்கள். அடக்கப்பட்ட இனம் குமுறி ஏழாமல் இருப்பதற்கு – விழித்தெழச் செய்ய விடாமல் அடக்கி வைப்பதற்கு – அவர்களை அறியாமை மயக்கத்தில் வைத்திருப்பதற்கு – கருத்துப் போதையை ஆட்சியாளர்கள் எப்போதும் பயன்படுத்தி வருகின்றனர். அதனால் உண்மையை – யதார்த்தத்தை – நிஜத்தை – மெய்மையை – மக்களுக்கு எடுத்தியம்பும் கருத்துருவாக்கிகளின் குரல்வளையை நசுக்கி, சுதந்திர சிந்தனை எண்ணவோட்டம் பரவாமல் பார்த்துக் கொள்வது ஆட்சியாளர்களின் பண்பியல்புதான்.

அதுவும், ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அதிகாரத்தை வைத்துக் கொண்டு, இராணுவ மயப்படுத்தப்பட்ட சர்வாதிகாரத்தை நோக்கி மெல்ல மெல்ல நகரும் ஆட்சித் தரப்பு மக்களைக் கருத்தாதிக்கச் சிறையில் கட்டி வைத்துத் கருத்துத் திணிப்பை விதைக்கவே விரும்பும்.

மக்களின் – தேசிய இனங்களின் – சிந்தனை விழிப்புணர்வை மழுங்கடித்து, அவர்களை அறியாமலேயே கருத்தாதிக்கச் சிறைக்குள் பூட்டி வைக்கவே ஆட்சித் தரப்பு எப்போதும் முயலும்.

மெய்மையத் திரிவுபடுத்தி, பொய்மையில் ஊறிய ஒரு புனைகதை நிலைப்பாட்டில் சமூக எண்ணவோட்டத்தை நிலை நிறுத்துவது ஒரு கண்கட்டு வித்தை போன்ற நுட்பமான தந்திரம்.

அதுவும், பௌத்த, சிங்களப் பேரினவாத சிந்தனையில் மூழ்கிக் கிடக்கும் தென்னிலங்கையை அந்தப் பின்புலத்தில், அந்த எண்ணச் சகதிக்குள் சிக்க வைத்தபடி அதில் தனது மேலாதிக்கத்தையும் சர்வாதிகாரத்தையும் நிலைநிறுத்துவது இன்றைய ஆட்சியாளர்களுக்கு சுலபமான ஒன்று.

அதையே அவர்கள் செய்ய விரும்புகின்றார்கள். தமது கருத்துருவாக்கப் பொய்மை நடவடிக்கைக்கு குறுக்காக – உண்மைகளை அம்பலப்படுத்தி மக்களையும் சர்வதேசத்தையும் விழிப்புற வைக்க எத்தனிக்கும் – கருத்துருவாக்கிகளுக்கு எதிராக ஆட்சியாளர்களின் – அதிகாரத் தரப்பின் – அரூபக் கரங்கள் நீளுவது தவிர்க்க முடியாததுதான்.

கருத்துருவாக்கும் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் தவிர்க்க முடியாமல் எதிர்கொள்ளும் நெருக்குவாரம் – அன்றும் இன்றும் – இதுதான்.

# நூறு பேரைக் களமிறக்குகிறது வன்முறை கண்காணிக்கும் மையம்!

கொழும்பு, ஜூன் 05

தேர்தலுக்கு முன்னரான கண்காணிப்பு பணிகளை எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பிக்கவுள்ளதாக, தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மையம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமையில் இருந்து, தேர்தலுக்கு முன்னரான கண்காணிப்பு பணிகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும், இந்தப் பணிகளில் தமது 100 கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்றும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மையம் தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவினால், பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நாள் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னர், மற்றுமொரு தொகுதி கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும், தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மையத்தின் இணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

## வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்புமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுத் தடுப்பு செயலணி மற்றும் விசேட வைத்திய நிபுணர்களுடன் நேற்று பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற பேச்சின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர், சுகாதாரத்துறை பணிப்பாளர் நாயகம், முப்படைத் தளபதிகள், விசேட வைத்தியர்கள் உள்ளிட்ட தரப்பினர் இந்தப் பேச்சில் கலந்து கொண்டனர்.

வெளிநாடுகளில் இருந்து வருகை தருவோரை குடிவரவு நடைமுறைகளுக்கு முன்னதாக பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கைகள் கிடைக்கும் வரை தனியாக ஓரிடத்தில் வைப்பதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்துமாறு இதன்போது ஜனாதிபதி கூறினார்.

பரிசோதனை அறிக்கைகள் கிடைத்த பின்னர், அவர்களைத் தனிமைப்படுத் தலுக்கு உட்படுத்துமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து வருகை தருவோர் பி.சி.ஆர். பரிசோதனை மற்றும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படும்போது எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் அவற்றைத் தீர்க்கக்கூடிய வழிகள் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கை கிடைப்பதை விரைவுபடுத்துவதற்காக விமான நிலைய வளாகத்தில் ஆய்வுகூட மொன்றை அமைப்பதற்குத் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதனைத் தவிர வெளிநாடுகளிலி ருந்து வருகை தருவோரை அந்தந்த நாடு களிலிலேயே பி.சி.ஆர். பரிசோதனைக்குட் படுத்தல், அது தொடர்பில் தலையீடு செய் வதற்கான இயலுமை குறித்து ஆராய்வ தற்கும் இந்தக் கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டது.

தொற்றுக்குள்ளானவர்களை முன் கூட்டியே கண்டறிவதன் மூலம் வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போதும், தனிமைப்படுத்தலின்போதும் ஏற்படக் கூடிய பல்வேறு சிக்கல்களைக் குறைத்துக்கொள்வது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

## பி.சி.ஆர். சோதனையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜதந்திர சிறப்புரிமையின் கீழ் பரிசோதனையை மேற்கொள்ளாது அவர் அங்கிருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டார் என்று விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் உப தலைவர் ரஜீவ சூரியராச்சி தெரிவித்தார்.

கட்டார் விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் அமெரிக்கத் தூதரக அதிகாரி நேற்று முன் தினம் அதிகாலை 1.30 மணியளவில் விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இதன்போது அவர் நடந்துகொண்ட விதம் தொடர்பில் ரஜீவசூரியராச்சி பின்வரு மாறு கருத்துத் தெரிவித்தார் -

பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்த முயற்சிக்கப்பட்டபோது சில மணித்தியாலங்களாக அவர் பரிசோதனையை நிராகரித்து தமது இராஜதந்திர அடையாளத்தை எமது அதிகாரிகளுக்குக் காண்பித்துள்ளார். அதன் பின்னர் எமது அதிகாரிகள் இராஜதந்திர சேவையில் உள்ள ஒருவருக்கு கிடைக்கும் சிறப்புரிமைகள் தொடர்பில் ஆராய்ந்து அது குறித்து கிடைத்த ஆலோசனைகள் மற்றும் அனுமதியின் பேரிலேயே அவர் நாட்டினுள் பிரவேசிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இராஜதந்திர அதிகாரிகளுக்கு இதன்போது சிறப்புரிமை கிடைக்கின்றது. குறிப்பாக அது சர்வதேச மட்டத்தில் உள்ள ஒரு விடயமாகும். தூதரகங்களில் உள்ள அதிகாரிகள் அதற்கான பொறுப்பை ஏற்று, அவரை தனிமைப்படுத்தி தேவையான பி.சி.ஆர். பரிசோதனையை நடத்தி வெளி விவகார அமைச்சுக்கு அறிவித்து எமது அரசுக்குத் தேவையான தகவல்களை வழங்குவார்கள் என்று நினைக்கின்றேன் - என்கிறார்.

இதேவேளை, வெளிநாடுகளில் இருந்து வரும் எவராலும் பி.சி.ஆர். பரிசோதனையை நிராகரிக்க முடியாது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் என விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

சாதாரண பயணிகளைப் போன்றே இராஜதந்திர அதிகாரிகளும் பி.சி.ஆர். பரிசோதனையை எதிர்கொள்ள வேண்டியது கட்டாயம் எனவும் அவர் கூறினார்.

இந்த இராஜதந்திர அதிகாரி இவ்வாறு செயற்பட்டமை தொடர்பில் விமான நிலைய அதிகாரிகளோ அல்லது வேறு தரப்பினரோ தமக்கு இதுவரை அறிவிக்கவில்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவிடம் வினவியபோது மேலதிக தகவல்களை வெளிவிவகார செயலாளரிடம் பெற்றுக் கொள்ளுமாறு கூறினார்.

எனினும், விமான நிலையத்துக்கு வருகை தந்த ஒருவர் அவ்வாறு நாட்டுக்குள் அனுமதிக்கப்பட்டமை தொடர்பில் வெளிவிவகார செயலாளர் என்ற வகையில் தம்மால் பொறுப்புக்கூற முடியாது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரவிநாத ஆரியசிங்க தெரிவித்தார்.

தமது இராஜதந்திரப் பணியாளர்கள் இலங்கைக்கு வருகை தரும் போது, இராஜதந்திர உறவுகள் தொடர்பான வியன்னா சர்வதேச பிரகடனம், தரங்கள் மற்றும் வழிமுறைகள் பின்பற்றப்படுவதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்தது.

வியன்னா பிரகடனத்தின் 41 ஆவது சரத்துக்கமைய, இராஜதந்திர சிறப்புரிமை வழங்கப்பட்டிருந்தாலும் நாட்டின் சட்டத்துக்கு மதிப்பளிக்க இராஜதந்திர அதிகாரிகள் கட்டுப்பட்டுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் முன்னாள் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி தமரா குணநாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனை ஆரம்பிக்கப்பட்ட நாளில், இலங்கைக்கு வருகைதந்த முதலாவது பயணியான ஐரோப்பிய ஒன்றிய பெண் அதிகாரி எவ்வித முரண்பாடும் இன்றி பி.சி.ஆர். பரிசோதனையை எதிர்கொண்டார்.

தனிமைப்படுத்தல் சட்டம் தொடர்பில் ஏற்கனவே வெளவிவகார அமைச்சு இலங்கையிலுள்ள தூதரகங்களுக்கு அறிவித்துள்ளது எனச் சீனாவின் ‘ஒரே மண்டலம் ஒரே பாதை’ திட்டத்தின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ ருவிட்டர் தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே, பி.சி.ஆர். பரிசோதனை மூலம் வியன்னா பிரகடனத்துக்குப் பாதிப்பு ஏற்படாது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய பின்புலத்தில் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் இலங்கையில் அந்தச் சட்டங்களை மதிக்காமைக்கு காரணம் என்ன என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இலங்கை அதிகாரிகள் அமெரிக்காவில் இவ்வாறு செயற்படுவதற்கான அனுமதி வழங்கப்படுமா எனவும் சீனாவின் ஒரே மண்டலம் ஒரே பாதை திட்டத்தின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ ருவிட்டர் தளத்தில் வினவப்பட்டுள்ளது.

# முகநூல் மீது காட்டம்!



வன்முறையைத் தூண்டும் விதமாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் முகநூலில் இட்ட பதிவு குறித்து எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காத தற்காக முகநூல் நிர்வாகத்தினர் மீது அதன் முன்னாள் ஊழியர்கள் தமது காட்டத்தைத் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து முகநூல் நிறுவனர் மார்க் ஸக்கர்பெர்கைச் சாடி அவருக்குக் கடிதம் ஒன்றையும் அவர்கள் எழுதியுள்ளனர். இது குறித்து அமெரிக்காவிலிருந்து வெளிவருகின்ற நியூயோர்க் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், பொலிஸ் துப்பாக்கிச் சூடு நடத்தும் என்கிற ரீதியில் எச்சரிக்கை விடுத்து கீச்சகத்தில் பகிர்ந்திருந்தார். இந்தப் பதிவு வன்முறையைத் தூண்டுவதாகக் குறிப்பிட்டு பொது நல அறிவிப்பு ஒன்றை கீச்சகம் வெளியிட்டது.

அதே பதிவு முகநூலிலும் பகிரப்பட்டது. ஆனால் இது முகநூலின்; விதிகள் எதையும் மீறவில்லை என்று அதன் நிறுவனர் ஸக்கர்பெர்க் கூறினார். அதே வேளையில் இப்படியான மோசமானப் பதிவுகளைக் கையாளும் விதத்தை மாற்றுவதாகவும் அறிவித்தார். இதன் தொடர்ச்சியாகவே தற்போது முன்னாள் ஊழியர்கள் முகநூல் நிர்வாகத்துக்குத் தமது கண்டனத்தைத் வெளிப்படுத்தியுள்ளனர்.

# சீனாவின் தேசிய கீதத்தை அவமதிப்பது இனி குற்றம்

## ஹொங்கொங்கில் தீர்மானம் நிறைவேற்றம்



சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்கில் சீனாவின் தேசிய கீதத்தை அவமதிப்பது குற்றம் என்கிற தீர்மானம் நிறைவேறியது. சீனாவின் தேசிய கீதத்தை அவமதிப்பதை குற்றம் என்று வரையறுக்கின்ற இந்தத் தீர்மான நிறைவேற்றமானது. அரை சுயாட்சி நகரமான ஹொங்கொங்கில் சீனாவின் இறுக்கமான பிடியின் அறிகுறி என்று விமர்சகர்கள் கருதுகின்றனர். இந்தத் தீர்மானம் ஹொங்கொங்கில் உள்ள தொடக்க மற்றும் இடைநிலைப் பாடசாலை மாணவர்களுக்கு சீன வரலாறு மற்றும் ஆசாரம் ஆகியவற்றுடன் கற்பிக்க வேண்டும் என்று கட்டளையிடுகிறது. சீனத் தேசிய கீதத்தை அவமதிப்பது மூன்று ஆண்டுகள் வரையான சிறைத் தண்டனைக்கு வழி வகுக்கும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. ஹொங்கொங்கின் சட்டமன்றத்தில் குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பது சீனாவின் பிடியைக் காட்டுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# போராட்டத்துக்கு 'கூகுள்' நிதி!

கறுப்பினத்தவரான ஜோர்ச் ஃபிளாய்டின் சாவை எதிர்த்து அமெரிக்காவில் போராட்டங்கள் நடந்து வரும் நிலையில் கூகுள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி சுந்தர் பிச்சை, இன ஏற்றத்தாழ்வுக்கு எதிராகப் போராடும் அமைப்புகளுக்கு 12 மில்லியன் அமெரிக்க டொலர்களை அன்பளிப்பாக வழங்குவதாக அறிவித்துள்ளார். மேலும் 25 மில்லியன் அமெரிக்க டொலர்களை விளம்பர நிவாரணமாகவும் சுந்தர் பிச்சை அறிவித்துள்ளார். இது குறித்து அவர் தெரிவித்ததாவது:

எங்கள் கறுப்பினச் சமூகம் பாதிக்கப்பட்டு வருகிறது. நாங்கள் இந்த விடயத்துக்கு நாம் எப்படிக் குரல் கொடுப்பது, ஆதரவைத் தெரிவிக்க எங்களுக்குப் பிடித்த மக்களிடம் எப்படிச் சென்று சேர்வது என எங்களில் பலரும் வழிகளைத் தேடி வருகிறோம் என்று சுந்தர் பிச்சை தெரிவித்துள்ளார். இது தவிர இறந்த கறுப்பினத்தவருக்கு மதிப்பளிக்கும் வகையில் கூகுள் ஊழியர்கள் மௌன அஞ்சலியில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




அமெரிக்கப் பொலிஸாரால் கொல்லப்பட்ட ஜோர்ச்ஃபிளாய்ட்டுக்கு நீதிகோரி மினியாபோலிஸ் நகரில் மக்கள் தரையில் விழுந்து கிடந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அமெரிக்காவில் பரவலாகப் போராட்டங்கள் நடந்துவரும் நிலையில் அந்தப் பேராட்டங்கள் உலகளவில் பரவவும் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பயணத் தடையை நீக்கியது இத்தாலி

இத்தாலியில் கொரோனா பரவல் குறைந்து வருவதைத் தொடர்ந்து அங்கு உள்நாட்டு மற்றும் பன்னாட்டு அளவிலான பயணத் தடைகள் நீக்கப்பட்டன. ஐரோப்பிய நாடுகளில் மார்ச், ஏப்ரல் மாதங்களில் கொரோனா பரவல் உச்சமடைந்தது. இதில் பெருமளவான சாவுகளையும் தொற்றுப் பரவலையும் இத்தாலி சந்தித்தது. மே மாதம்தான் இத்தாலியில் கொரோனா பரவல் குறைந்தது. இதனைத் தொடர்ந்து அங்கு படிப்படியாக ஊரடங்கில் தளர்வுகள் அறிவிக்கப்படுகின்றன. இந்த நிலையில் தற்போது பயணத் தடையை விலக்குகிறது இத்தாலி. இதுகுறித்து இத்தாலியின் தலைமை அமைச்சர் ஜிசப்பே கான்டே தெரிவித்ததாவது: கொரோனா தொற்றால் புதிதாக பாதிக்கப்படுபவர்கள் எண்ணிக்கை குறைந்து வருகிறது. கொரோனாவைத் தடுப்பதில் இத்தாலி சரியான பாதையில் உள்ளது. மே மாதம் 4 ஆம் திகதி நாங்கள் உற்பத்தி மற்றும் கட்டுமானத் துறைகளைத் திறந்தபோது அது எங்களைப் பொருளாதார ரீதியாக ஊக்கமளித்தது. இந்த நிலையில் இன்று முதல் ஐரோப்பாவைச் சேர்ந்தவர்கள் இத்தாலிக்கு வருகை தரலாம். அவர்கள் தனிமைப்படுத்தப்படமாட்டார்கள். தேசிய அளவிலும் பயணத் தடை நீக்கப்பட்டுள்ளது - என்றார்.

# மற்றொரு சீன மருத்துவர் சாவு

சீனாவில் கொரோனா தொற்றியவர்களுக்குச் சிகிச்சை அளித்து வந்த மருத்துவர் சாவடைந்துள்ளார். இதையடுத்து, கொரோனா விவகாரத்தை அரசு சரியாகக் கையாளவில்லை என மக்களுக்குத் தோன்றியுள்ள எண்ணம், அரசுக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த நான்கு மாதங்களாக கொரோனா நோயுடன் போராடி வந்த மருத்துவர் ஹு வேஃபெங், ஜூன் மாதம் 2ஆம் திகதி காலமானார். இவரது கல்லீரல் சரியாகச் செயற்படாமல் போனதால், உடல் கருப்பு நிறத்துக்கு மாறத்தொடங்கி அவர் சாவடைந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவரது சாவுக்கான சரியான காரணம் இன்னும் பொதுவெளியில் அறிவிக்கப்படவில்லை. சீன சமூக வலைத்தளங்களில் கோபம் நிறைந்த கருத்துக்களை மக்கள் பதிவிட்டு வருகிறார்கள்.

கடந்த டிசெம்பர் மாதம், கொரோனா வைரஸ் பரவல் குறித்த தகவலை வெளியில் கூறிய மருத்துவர் லீயின் குரலை சீன அதிகாரிகள் அடக்க முயன்று அவரை கண்டித்தது, அவர் இறந்தபோது தெளிவாக தெரிய வந்துவிட்டது.

இது மக்களிடையே பெரிய கொதிப்பை ஏற்படுத்தியது. இந்த இரண்டு மருத்துவர்களுக்கும் ஒருவரை ஒருவர் தெரியுமா என்பது இன்னும் தெளிவாக தெரியவில்லை என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.



# ஆஸி. பிரதமருடன் மோடி ஆலோசனை

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி இன்று ஆஸ்திரேலியாவின் தலைமை அமைச்சர் ஸ்கொட் மோரிசனுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆலோசனை நடத்தினார். கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ள முடியாததால் மெய்நிகர் உச்சி மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும், இந்த நிகழ்வானது, ஆஸ்திரேலியாவுடனான உறவுகளை வலுப்படுத்துவதைக் குறிப்பதாகவும் இந்திய அயலுறவுத்துறை அமைச்சகம் நேற்று அறிக்கை வெளியிட்டிருந்தது.

அந்த வகையில் மோடியும் ஸ்கொட் மோரிசனும் காணொலி வாயிலாகப் பங்கேற்று இரு தரப்பு உறவுகள் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து இன்று ஆலோசனை நடத்தினர். கொரோனா பாதிப்பு நிலைமை சீரடைந்த பின்னர், குடும்பத்தினருடன் இந்தியா வரவேண்டும் என்று மோடி இதன்போது கேட்டுக்கொண்டார். அத்தோடு ஆஸ்திரேலிய மக்களுக்கு இந்தியா சார்பில் இரங்கலைத் தெரிவித்தார்.

கொரோனா பாதிப்பால் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினையில் இருந்து விடுபட இரண்டு நாடுகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். இந்தியா – ஆஸ்திரேலிய உறவு விரிவடைந்து வருகிறது. இரு நாடுகளுக்கிடையிலான உறவு உலகிற்கு நன்மை பயப்பதாகவும் உள்ளது' என்றும் மோடி பேசினார். மோடி வெளிநாட்டுத் தலைவருடன் இருதரப்பு மெய்நிகர் உச்சிமாநாட்டை நடத்துவது இதுவே முதல் முறையாகும்.



## ரஜினி பாராட்டு



செம்மொழி தமிழாய்வு நிறுவனத்துக்கு இயக்குநர் நியமிக்கப்பட்டதற்கு நன்றி தெரிவித்து இந்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சருக்கு நடிகர் ரஜினிகாந்த் கடிதம் எழுதி உள்ளார்.

சென்னையில் உள்ள செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் முதலாவது இயக்குநராகப் பேராசிரியர் ஆர்.சந்திரசேகரன் நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், செம்மொழி தமிழாய்வு நிறுவனத்துக்கு இயக்குனரை நியமனம் செய்ததை நடிகர் ரஜினிகாந்த் பாராட்டி உள்ளார்.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக மேற்கொள்ளும் முயற்சிகளுக்கும், பேராசிரியர் சந்திரசேகரனை இயக்குநராக நியமித்ததற்கும் அந்தக் கடிதத்தில் நன்றி தெரிவித்துள்ளார் நடிகர் ரஜினிகாந்த்.

செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் இயக்குநராக உதவிப் பேராசிரியர் நிலையிலுள்ள ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பது போதுமானது அல்ல, என்று பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் தெரிவித்தார் இந்த நியமனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புதையலுக்காக சிறுமி கொலை

### இந்தியாவில் ஈனச் செயல்

புதையல்கிடைக்கவேண்டும் என்பதற்காக 13 வயதுச் சிறுமி ஒருத்தி கொலை செய்யப்பட்டுள்ளாள். இந்தச் சம்பவம் இந்தியாவின் தமிழகம் புதுக்கோட்டையில் நிகழ்ந்தது. புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை அருகேயுள்ள நொடியூர்க் கிராமத்தைச் சேர்ந்த வித்யா எனும் சிறுமியே இவ்வாறு கொல்லப்பட்டாள்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:–

பன்னீரின் என்பவருடைய மகள் வித்யா (வயது13) பாப்பான் குளம் அருகேயுள்ள தைலமரக்காட்டுப் பகுதியில் ஆடைகள் கிழிந்த நிலையில், முகத்தில் காயத்துடன் மயங்கிக் கிடந்துள்ளாள். இதனைக் கண்டவர்கள் அவளை மீட்டு தஞ்சாவூர் அரசமருத்துவமனையில் சேர்த்தனர்.

அங்கு சிகிச்சை பலனின்றி கடந்த மே19ஆம் திகதி வித்யா உயிரிழந்தார். இது தொடர்பாகப் பொலிஸில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு வித்யா, வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு,



கொலைசெய்யப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணை நடந்தது.

ஆனால், பிரேத பரிசோதனை அறிக்கையில், அவள் வன்புணர்வுசெய்யப்படவில்லை என்பது உறுதியானது. விசாரணையில் வித்யாவின் அப்பா பன்னீர், முன்னுக்குப் பின் முரணாகப் பதில் அளித்துள்ளார்.

இதனால்சந்தேகம்அடைந்த பொலிஸார் அவரிடம் கடும் விசாரணை நடத்தியதில் தானும் தனது இரண்டாவது மனைவியும் சேர்ந்து பணப் பிரச்சனையைத் தீர்ப்பதற்காகப் புதுக்கோட்டையைச் சேர்ந்த மந்திரவாதியான வசந்தியின் பேச்சைக் கேட்டுத் தனது மகளை நரபலி கொடுத்ததாக ஒப்புக் கொண்டுள்ளார். இதையடுத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## உலகப் போரின் போது கூட இவ்வாறு ஊரடங்கு இல்லை

### ராகுல் காந்தி தெரிவிப்பு



கொரோனா வைரஸால் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி தொடர்பாக ராகுல் காந்தி பொருளாதார நிபுணர்களுடன் தனது சமூகவலைத்தளப் பக்கத்தில் உரையாடி வருகிறார், அந்த வரிசையில் தொழிலதிபர் ராஜிவ் பஜாஜுடன் அவர் உரையாடியபோது–

உலகப்போரின் போது கூட இத்தகைய ஊரடங்கு இல்லை என்றே கருதுகிறேன். அப்போது கூட திறந்துதான் இருந்திருக்க வேண்டும். இது தனித்துவமான பேரழிவுதரும் ஒரு நிகழ்வாக இருக்கிறது என்றுள்ளார்.

அப்போது அவர் மேலும் தெரிவித்ததாவது: பணக்கார மக்கள் இதனை சுலபமாக எதிர்கொள்வார்கள், ஆனால் ஏழைகள், புலம்பெயர்வோர் என்ன செய்வார்கள்? அவர்களுக்குப் பேரழிவுதான். மேற்கு நாடுகளைப் பார்த்துச் செயற்படுவதை விட நாம் ஏன் ஒரு இந்திய தீர்வை கண்டுப்பிடித்துக் கொள்ளக் கூடாது. அதுஏன் நம் இயல்பான உந்துதலாக இல்லை? என்றார்.

## பன்றிக்கு வைத்த பொறியிலே சிக்கியது கர்ப்பிணி யானை

### கேரளாவில் இறந்த யானை குறித்து வனத்துறை தெரிவிப்பு



கேரளாவில் யானைக்கு அன்னாசிக்குள் வெடி வைத்து அதைக் கர்ப்பிணி யானைக்குக் கொடுத்ததால் அது சாவடைந்ததாகச் செய்தி வெளியாகியிருந்தது. ஆனால் குறித்த யானைக்கு யாரும் வெடிமருந்து நிரம்பிய அன்னாசிப் பழங்களைக் கொடுக்கவில்லை என்று தெரியவந்திருக்கிறது.

இந்திய ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த இந்திய வனத்துறை அதிகாரி ஏபி க்யூம் இதனைத் தெரிவித்தார்.


காட்டுப்பன்றிகளிடம் இருந்து பயிர்களைக் காப்பதற்காக வைக்கப்பட்டிருந்த வெடிமருந்து நிரப்பப்பட்ட அன்னாசிப் பழங்களை யானை பசியில் உண்டதாகத் தெரிகிறது. அந்தப் பகுதியில் உள்ள மக்கள் விலங்குகளிடம் இருந்து தங்களையும், தங்களது பயிர்களையும் பாதுகாக்க இது போன்ற விடயங்களைச் செய்கின்றனர். விவசாயிகள் தங்களது பயிர்களைக் காட்டுப் பன்றிகளிடம் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக வலைகளை வைக்கின்றனர். இந்த வலைகளில் காட்டுப்பன்றிகள் மட்டுமல்லாது பிற விலங்குகளும் சிக்கிவிடுகின்றன.

இறந்த கர்ப்பிணிப் பெண் யானை பாலக்காட்டில் உள்ள சைலண்ட் வேலித் தேசிய பூங்காவில் இருந்து வந்துள்ளது. அது இறந்தது அனைவருக்கும் பெரும் வலியைக் கொடுத்து விட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## வலுவிழுந்தது நிசர்கா

'நிசர்கா' புயல் வலுவிழந்து காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக விதர்பாவின் மேற்குப் பகுதிக்கும், அதையொட்டியுள்ள மத்திய பிரதேசப் பகுதிக்கும் நகர்ந்தது. இதுகுறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்ததாவது:-

விதர்பாவின் மேற்குப்பகுதியில் நிலவிய காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் (தீவிரப்புயல் 'நிசர்கா'வின் வலுவிழந்த நிலை) 6 மணி நேரமாக வடகிழக்குத் திசையில் மணிக்கு 27 கிலோ மீற்றர் வேகத்தில் நகர்ந்து. பின்னர் கிழக்கு - வடகிழக்கு திசையில் நகர்ந்து, இன்று மாலையில் காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுவிழக்கும் என்றது.



# கொரோனாவுக்குப் பின்னரான புதியதோர் உலகை இயற்கையுடன் இசைந்து நாங்கள் கட்டமைப்போம்

## சுற்றுச்சூழல் தினச்செய்தியில் பொ.ஐங்கரநேசன் அழைப்பு



யாழ்ப்பாணம்,ஜுன்05

*கொரோனா வைரஸ் இயற்கையில் இருந்து வேறானதொன்றல்ல. அதுவும் இயற்கையில் ஓர் படைப்பே. அதன் மூலம் இன்று இயற்கை ஊதியிருக்கும் அபாயச்சங்கு மனுக்குலத்துக்கான ஓர் எச்சரிக்கை. இதனைப் புரிந்துகொண்டவர்களாகக் கொரோனாவுக்குப் பின்னரான புதியதோர் உலகை இயற்கையுடன் இசைந்து கட்டமைப்போமாயின் ஏனைய உயிர்களைப் போன்று இப்புவியில் மனிதன் நோய் நொடியின்றி நீடூழிவாழலாம் - என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரும் வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் தெரிவித் துள்ளார்.*

உலக சுற்றுச்சூழல் தினம் ஜுன் - 5ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையால் கொண்டாடப்பட்டு வருகி றது. இதை முன்னிட்டு பொ.ஐங்கரநேசன் வெளியிட்டி ருக்கும் ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் -

மனித உயிர்களைக் கொத்துக் கொத்தாக பலியெடுத்துக் கொண்டிருக்கும் புதிய கொரோனா வைரஸ் இதன் மூத்த முடிசூடிகளான சார்ஸ், மேர்ஸ் வைரஸுக்களைப் போன்றே காட்டு விலங்குகளில் இருந்து மனிதர்களுக்குத் தாவிய விலங்கு வைரஸ் ஆகும். புதிய கொரோனா வைரஸின் கருப்பொருளைஆராய்ந்ததில் இவற்றின் உறைவிடம் சீனாவின் குதிரைலாட வௌவால்களும் சீனச் சந்தைகளில் விற்பனையாகும் மலாயன் அழுங்குகளும் என்பது தெரியவந்துள்ளது. இவற்றை உறைவிடமாக அல்லது இடைவிருந்து வழங்கிகளாகக் கொண்டிருந்த சார்ஸ் வகைக் கொரோனாக்களே மனிதர்களில் தாவிப் பெருகும்போது விகாரமுற்று கொரோனா - 19 என்ற இரண்டாவது அவதாரமெடுத்து உலகை வலம் வரத் தொடங்கியுள்ளன. காட்டு விலங்குகள் மனிதனுக்கு இதுவரையில் அறிமுகம் இல்லாத எண்ணற்ற வைரஸுக்களின் உறைவிடங்களாக உள்ளன. மனிதர்கள் இவற்றைக் கையாளுகின்றபோது, மனிதர்களுக்குத் தாவி விடுகின்ற இவை, அதுவரைப் பரிச்சயமில்லாத வைரஸ் என்பதால் மனிதன் நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொண்டிராத நிலையில் அவனிடத்தே பல்கிப்பெருகத் தொடங்குகின்றன. பின்னர், அங்கிருந்து காட்டுத்தீ போல எளிதில் மனிதர்களுக்கு மனிதர் பரவ ஆரம்பித்து விடுகின்றது. சார்ஸ், மேர்ஸ் நோய்கள் காட்டுவிலங்குகளில் உறையும் வைரஸுக்களினால் எதிர்காலத்தில் ஏற்படவுள்ள அபாய அறிவிப்புகளாக இருந்தபோதும் மனிதர்கள் அதனைக் கண்டுகொள்ளவில்லை. உணவுக்காகவும், மருத்துவத்துக்காகவும், செல்லப் பிராணிகளாக வளர்ப்பதற்கெனவும் தினமும் காடுகளில் இருந்து விலங்குகள் கடத்தப்படுவது தொடர் கதையாகவே நீடிக்கிறது. போதைப்பொருள் கடத்தல், ஆயுதக் கடத்தல் போன்று வன விலங்குகள் கடத்தலும் சர்வதேச வலைப்பின்னலோடு பெருமெடுப்பில் இடம்பெற்றுவருகிறது. காட்டு விலங்குகளின் கடத்தலினால் உலகின் உயிர்ப்பல்வகைமை கேள்விக்குறியாகி வருகிறது. கடந்த 2019 ஆம் ஆண்டில் மட்டும் இரண்டு இலட்சம் அழுங்குகள் அவற்றின் செதில்களைப் பெறும் பொருட்டுக் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றன என உலக கானுயிர் நிதியம் தெரிவித்திருக்கிறது.

உலகில் எல்லா உயிரினங்களும் ஒன்றுடன் ஒன்று ஏதோ ஒரு விதத்தில் தொடர்புபட்டு உயிர்வலைப் பின்னலாகவே இயங்கு கின்றன. இவற்றில் ஓரிழை அறுந்தாலும் உயிரினச் சமநிலை பாதிக்கப்பட்டுக் கடைசியில் மனிதர்களும் பாதிப்புக்குள்ளாக நேரிடும். காட்டு விலங்குகளில் மாத்திரம் அல்ல, இதுவரை மனிதர்களுக்குப் பரிச்சயம் இல்லாத, மனிதர்கள் பூமியில் நடமாடுவதற்கு முன்பாகவே தோன்றிய ஏராளமான வைரஸுக்கள் துருவப் பனிப்பாறைகளின் கீழ் உறங்கு நிலையில் இருக்கின்றன என ஆய்வாளர்கள் அண்மையில் கண்டறிந்துள்ளனர். மனிதர்கள் அளவுக்கு அதிகமாக வெளியேற்று கின்ற கரிக்காற்று பூமியைச் சூடுபடுத்துவதால் பனிப் பாறைகள் உருகி வழிய ஆரம்பித்திருக்கின்றன. இதன் போது பனிப்பாறைகளில் சிக்குண்டு இருக்கும் வைர ஸுக்களும் வெளியேற நேர்ந்தால் எதிர்காலத்தில் இவற்றுக்கும் சேர்த்தே மனிதர்கள் முகங்கொடுக்க நேரிடும். கொரோனா வைரஸ் இயற்கையில் இருந்து வேறானதொன்றல்ல. அதுவும் இயற்கையில் ஓர் படைப்பே. அதன் மூலம் இன்று இயற்கை ஊதியிருக்கும் அபாயச்சங்கு மனுக்குலத்துக்கான ஓர் எச்சரிக்கை. இதனைப் புரிந்து கொண்டவர்களாகக் கொரோனாவுக்குப் பின்னரான உலகை இயற்கையுடன் இசைந்து கட்டமைப்போமாயின் ஏனைய உயிர்களைப் போன்று இப் புவியில் மனிதன் நோய் நொடியின்றி நீடூழி வாழலாம். இல்லை, இது செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான் இருக்குமெனின் இயற்கை இன்னும் இன்னும் வலிய கொரோனாக்கள் மூலம் எங்களுக்கான எச்சரிக்கையை விடுத்துக்கொண்டேயிருப்பது தவிர்க்க முடியாததாகவே இருக்கும். - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

## பொதுத் தேர்தல் வேட்பாளர் ஒழுக்கக் கோவை வெளியீடு!

கொழும்பு, ஜுன் 05

பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான ஒழுக்கக் கோவை தேர்தல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. அதிவிசேட வர்தமானி அறிவித்தல் மூலமாக இந்த ஒழுக்கக் கோவை வெளியிடப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட நாளில் இருந்து, தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும் காலப்பகுதி வரை இந்த ஒழுக்கக் கோவை வலுவுடையதாகஇருக்கும்என்றுதேர்தல்ஆணையாளர்கள் மூவரும் ஒப்பமிட்டு வெளியிட்டுள்ள அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்படுகின்ற ஒழுக்க நெறிக் கோவை அனைத்துத் தேர்தல்களிலும் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள், அரசியற் கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து முதன்மைப் பதவி தாங்கு நர்களுக்கும், மாகாண சபை மற்றும் உள்ளூரதிகார சபை ஆகிய வற்றைப் பிரதிநிதித்துவப்படுத்து கின்ற அரசியல்வாதிகளுக்கும், மற்றும் அனைத்து அரசியற் கட்சிகளின் செயற்பாட்டாளர்களுக்கும், வேட்பாளர்களின் ஆதரவாளர்களுக்கும் , சுயேச்சைக் குழுக்களின் தலைவர்க ளுக்கும் , அவற்றின் வேட்பாளர்களுக்கும் ஏற்புடையதாகு மெனவும் அந்த அதிவிசேட வர்த்தமானியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

## இன்று உலக சுற்றுச்சூழல் தினம்

ஒவ்வொரு வருடமும் ஜீன் மாதம் 5 ஆம் திகதி உலக சுற்றுசூழல் தினம் கொண்டாடப்படுகின்றது. 1972 ஆம் ஆண்டு சுவீடன் தலைநகரான ஸ்டாக் ஹோமில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித குடியிருப்பும், சுற்றாடலும் என்ற உச்சுமாநாட்டில் உலக சுற்றுச்சூழலின் முக்கியத்து வம், இயற்கை வளங்கள் மற்றும் அதன் பிரயோகம் பற்றி கலைந்துரையாடப்பட்டது. அதன் இறுதியில் பூமியையும் அதன் சுற்றுவட்டப்பகுதி மற்றும் இயற் கையைப் பாதுகாத்திடும் வகையில் ஜீன் மாதம் 5 ஆம் திகதி உலக சுற்றுச்சூழல் தினம் பிரகடனப்படுத் தப்பட்டது. சுற்றுச்சூழல் விழிப்புணர்வின் நோக்கம் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை பொது மக்களிடம் ஏற்படுத்தி, அவர்கள் பங்களிப்புடன் வள மான சுற்றுச்சூழலை எதிர்கால சந்ததியினருக்கு விட்டுச் செல்வதாகும்.

எம்மைச்சுற்றியுள்ள உயிருள்ள, உயிரற்ற கூறு களின் தொகுதியே சுற்றுச்சூழல் அல்லது சூழல்



அல்லது சுற்றுப்புறம் என இலகுவாகக் கூறலாம். மனிதனைச் சுற்றியுள்ள இயற்கையின் மொத்த அம்சம் சுற்றுச்சூழலாகும்.

மனிதன் உட்பட அனைத்து உயிரினங்களும்

> சுற்றுச்சூழலை பாதுகாத்து, நோய்க் காரணிகளின் தொற்றுக்கு ஆளாகாமல், வாழ்நாளை அதிகரித்து மகிழ்வாக வாழ சுற்றுச்சூழல் பற்றிய அவதானம் மற்றும் அறிவு என்பன ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியம்.

வாழ்வதற்கு சிறந்த கோளான புவி மண்டலம் நிலம், நீர், வளி, மற்றும் உயிரினம் எனும் நான்கு பிரதான தொகுதிகளை உள்ளடக்கியது. பிரபஞ்சத்தில் அனைத் திற்கும் முதன்மையானவன் மனிதன். இயற்கை யின் மேம்பட்ட உயிரியாக விளங்கும் மனிதனின், அனைத்து செயற்பாடுகளும் சுற்றுச்சூழலை மைய மாக கொண்டுள்ளன. மனிதனின் வாழ்க்கைக்கு மூலாதாரமாக விளங்கும், அவனைச் சுற்றியுள்ள உயிருள்ள மற்றும் உயிரற்ற சடப்பொருள்களை உள்ளடக்கிய இன்றியமையாத விடயம் சுற்றுச் சூழ



பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன்
சமூகவியல் துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்.

# சுற்றுச்சூழலை பாதுகாக்க தவறினால் அது சுடுகாடாவது தவிர்க்க முடியாதது

லாகும். சுற்றுச்சூழல் பெரும்பாலும் இயற்கைச் சூழல், செயற்கைச் சூழல் என இரண்டு விதமாக நோக்கப்படுகின்றது.

ஆரம்ப காலம் முதல் இன்றுவரை மனிதனுக் கும் சூழலுக்கும் இடையிலான தொடர்பு தவிர்க்க முடியாதது. ஆரம்ப காலங்களில் அறிவியல் விருத் தியானது மிக பின்தங்கிய நிலையில் காணப்பட்டதால் சூழல் மனிதனை கட்டுப்படுத்துகின்ற பாரிய சக்தி யாக இருந்தது. உதாரணமாக மழை, புயல் போன் றவற்றைக் குறிப்பிடலாம்.

இதற்கு அடுத்து மனிதன் சூழலை கட்டுப்படுத்தி னான். உதாரணமாக மழை பொழிகின்ற சந்தர்ப் பங்களில் அவற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்வ தற்கு இலைகுழைகளைப் பயன்படுத்தி கூடாரங் களை அமைத்துக் கொண்டான். இதற்கு பிற்பட்ட காலங்களில் மனிதன் சூழலை கட்டுப்படுத்தும் அதே வேளை சூழல் மனிதனைக் கட்டுப்படுத்தியது. மனி தன் அறிவியல், தொழிநுட்ப திறன் போன்றவற்றில் உச்சக்கட்டத்தை அடைந்த போதிலும், இயற்கைச் சூழலுக்கு கட்டுப்பட்டு வாழ்கின்ற நிலைக்கு தள்ளப் பட்டுள்ளான். உதாரணமாக சுனாமி, எரிமலை வெடிப்பு, சூறாவளி போன்ற இயற்கையின் சீற்றங் களை எதிர்கொள்கின்றான். சுற்றுச்சூழலை மாற்றி யமைக்கும் ஒரு சிற்பி மனிதனாவான். தன்னு டைய தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு சூழலை பயன்படுத்துகிறான். மிகையான தேவைக ளின் அதிகரிப்பால் சுற்றுச்சூழல் மாசுபடுகின்றது.

சுற்றுச்சூழல் பாதிப்பு கைத்தொழில் புரட்சியின் பின்னரே அதிகளவில் ஏற்படத்தொடங்கியது. சனத் தொகை அதிகரிக்க தேவைகளும் நாளுக்கு நாள் அதிகரிக்கத்தொடங்கின. இவ்வாறான தேவைகளைப்





பூர்த்தி செய்து கொள்வதற்கு சுற்றுச்சூழலலை மனி தன் பன்மடங்கு பயன்படுத்தத் தொடங்கினான். மிகையான வளப்பயன்பாடு, தொழிநுட்ப சாதனங் களின் வருகை, தொழிநுட்ப கண்டுபிடிப்புக்கள், மனித அறிவு விருத்தி, தொழிற்சாலை கழிவுகளை முறையாக அகற்றாமை, பிளாஸ்டிக் மற்றும் பொலித் தீன் பொருள்களின் பாவனை, மலைகளையும், காடுகளையும் அழித்தல், வாகன இரைச்சல், வாக னப்புகை, பீடி, சிகரெட் புகை, இரசாயன உரம், பூச் சுக் கொல்லி மருந்துகளின் பாவனை, உயிர்ப்பல் வகைமை அழிப்பு போன்ற பல காரணங்களினால் சுற்றுச்சூழல் மாசுபடுகின்றது.

**வளி மாசடைதல் :-** தொழிற்சாலைகளில் வாயுக்க ளின் வெளியேற்றம், வாகனப்புகை, டயர்களை எரித்தல் போன்ற செயற்பாடு வளி மண்டலத்தை பாதிக்கின்றது. மனிதன் சுவாசிக்கும் காற் றில் இவ்வாறான புகைகளின் வெளி யேற்றம் சுவாசக்கோளாறுகளை ஏற்படுத் துகின்றது. அதுமட்டுமில்லாது ஓசோன் படலத்தை ஓட்டையாக்குகிறது. மனிதன் பீடி, சிகரெட் போன்ற கொடிய - தற்கொ லைக்கு ஈடான - விடயத்தை உள்ளே இழுத்து அதை வெளியிடுவதால் அருகில் இருப்பவர்களுக்கு மூச்சுத்திணறல், சுவாச உறுப்புக்களில் கோளாறுகள் மற்றும் புற்றுநோய் போன்ற கொடிய நோய்கள் ஏற்படுகின்றன.



(15 ஆம் பக்கம் பார்க்க)

**ஜூன் 5 - இன்று உலக சுற்றுச்சூழல் தினம். அதையொட்டிப் பதிப்பாகின்ற கட்டுரை இது.**

வி.பிரசாந்தன்

# பூமி எமது தாய் மடி

## இயற்கை காப்போம்...!

இன்று உலக சுற்றுச்சூழல் தினம். சுற்றுச் சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத் தும் ஒரு தினம். 1972ஆம் ஆண்டில்



சுவீடனின் தலைநகரான ஸ்ரொக்ஹோமில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித குடியிருப்பும், சுற்றாடலும் என்ற வரலாற்றுப் புகழ்மிக்க மாநாட்டில் உலக சுற்றுச் சூழலின் முக்கியத்துவம், இயற்கை வளங்கள், அவற்றின் பயன்பாடு என்பன பற்றி கலந்துரையாடப் பட்டது. முடிவில் ஜூன் 5ஆம் திகதியை உலக சுற்றுச் சூழல் தினமாக அறிவிக்கும்; தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இந்தத் தினத்தின் கொண்டாட்டங்களுக்குப் பொறுப்பாக ஐக்கிய நாடுகள் சூழல் திட்டம் செயற்படுகின்றது.

### கொரோனாவால் மாற்றம்!

2020ஆம் ஆண்டின் தொனிப்பொருளாக புவியில் காணப்படும் உயிர்ப்பல்வகைமையை உள்ளார்ந்த அடிப்படையிலும் மிக உச்சமாகவும் பாதுகாத்தல் வேண்டும். தற்போது உலகில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸின் தோற்றமானது சூழலில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாகக் கைத்தொழிற்சலைகளின் பயன்பாடு வெகுவாக குறைவடைந்துள்ளது. அத்துடன் ஆய்வு நடவடிக்கைகள் அனைத்தும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. உலக நாடுகளில் இந்த ஊரடங்கு காலப்பகுதியில் காட்டு விலங்குகள் உள்நாட்டுப்பகுதியில் சுதந்திரமாக வலம் வருவதை அவானிக்க கூடியதாக இருந்தது. ஆரம்ப காலங்களில் சூழல் தான் மனிதனை கட்டுப்படுத்தியது. ஆனால் பின்னர் மனிதன்சூழலைதனதுசுயதேவைக்காகப்பயன்படுத்தும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. எவ்வாறு இருப்பினும் இறுதியில் விளைவுகள் அனைத்தும் மனிதனுக்கே வந்து சேரும் என்பதில் சந்தேகம் இல்லை.

### சமநிலைக் குழப்பம் அழிவைத் தரும்

இயற்கை வளங்களான நீர்நிலைகள், காடுகள், வனாந்திரங்கள், வனசீவராசிகள், வளிமண்டலம், பறவைகள், கடற்கரைகள் அனைத்தும் மனித குலத்துக்காக வடிவமைக்கப்பட்ட பொக்கிசங்களாகும். மனிதகுலம், விலங்கினம், பறவையினம், தாவரங்கள், கடல்வாழ் உயிரினங்கள் ஆகியவற்றின் நல்வாழ்வு இந்த சுற்றுச் சூழலின் சமநிலையிலேயே தங்கியுள்ளது. இந்தச் சமநிலையில் ஏற்படும் மாற்றங்கள் உயிரினங்களின் வாழ்வுக்கு அச்சுறுத்தலாகவும் ஆபத்தாகவும் அமையும். விஞ்ஞான, தொழில்நுட்ப, கைத்தொழில்துறை வளர்ச்சியின் காரணமாக சுற்றுச் சூழல் மாசடைகிறது. இரசாயனக் கழிவுகள், புகை என்பன நீர் நிலைகள், வளிமண்டலம் என்பவற்றை மாசுபடுத்துவதால் உயிரினங்களுக்கு ஆபத்தாக அமைகிறது.

### பாதுகாக்கும் கடமை மனிதனதே!

சுற்றுச் சூழலை மனிதன் பாதூக்கவே கடமைப்பட்டவன். நினைத்தவாறு அவற்றை அனுபவிக்கும் உரிமையைக் கொண்டவனல்லன். சுற்றுச்சூழலைப் பேணிப்பாதுகாக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து செயற்படத் தவறியதன் விளைவுகளை மனிதகுலம் இப்போது தாராளமாக அனுபவிக்கத் தொடங்கி விட்டது. ஒருபுறத்தில் வறட்சி மறுபுறத்தில் வெள்ளக் கொடுமை, சூறாவளியும் என்று இயற்கை இடர்கள் சுழற்சியாக வந்து கொண்டேயிருக்கின்றன. மேற்குலகில் சூழலியல் அரசியலின் முக்கியமானதொரு அம்சமாகியுள்ள காரணத்தால் பசுமைக்கட்சிகள் தோற்றம் பெற்று நாடாளுமன்ற ஆசனங்களையும் கைப்பற்றி மனிதருக்கும் சுற்றுச் சூழலுக்கும் இடையிலான நெருக்கமான பிணைப்புப் பற்றி மக்கள் மத்தியில் கூடுதல் விழிப்புணர்வு உருவாகுவதற்குப் பெரும் பங்களிப்பைச் செய்து வருகின்றன.

> *சுற்றுச் சூழலை மனிதன் பாதூக்கவே கடமைப்பட்டவன். நினைத்தவாறு அவற்றை அனுபவிக்கும் உரிமையைக் கொண்டவனல்லன். சுற்றுச்சூழலைப் பேணிப்பாதுகாக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து செயற்படத் தவறியதன் விளைவுகளை மனிதகுலம் இப்போது தாராளமாக அனுபவிக்கத் தொடங்கி விட்டது.*

### மனிதனின் இருப்புக்கு மரங்கள் முக்கியம்

மரங்களுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான உறவு மிகவும் முக்கியமானதாகும். மனிதனின் இருப்புக்கு மரங்கள் அத்தியாவசியம் என்பதைப் பலரும் உணர்வதில்லை. மரங்கள் இல்லையெனில் நாம் இறந்துவிடுவோம். இதனாலேயே சுற்றுச் சூழலியலாளர்கள் மரங்கள் தறித்து வீழ்த்தப்படுவதற்கு எதிராகப் பெரும் இயக்கங்களை முன்னெடுத்து வந்திருக்கிறார்கள். மனிதர்களால் செய்யப்படக்கூடிய மிகவும் மூர்க்கத்தனமான செயல்களில் ஒன்று மரங்களையும் காடுகளையும் அழித்து அதன் மூலம் பூமியைப் பாலைவனம் ஆக்குவதுதான். பாதுகாக்கப் பட்ட சில பகுதிகளை விட்டால் இந்த வனப்புமிகு முதுசத்தின் பெரும்பகுதி இழக்கப்பட்டுவிட்டது. எஞ்சியுள்ள காடுகளும் சீரழிக்கப்பட்டு வருகின்றன.

### பேணவேண்டிய பொறுப்பு மனிதனுக்கு

மனித அபிவிருத்திக்காகவும், அடுத்த சந்ததிக்காகவும் இயற்கை வளங்களை மனிதன் திட்டமிட்டுப் பேண வேண்டிய பொறுப்புடையவன். சுற்றுச்சூழல் பாதுகாப்பு அக்கறை என்பது சில நிபுணர்கள் மாத்திரம் நட்சத்திர விடுதிகளில் கருத்தரங்குகளை நடத்தி விவாதிக்கும் ஒரு விவகாரம் என்று இன்னும் கூடப் பலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். சுற்றுச் சூழலியலாளர்களின் பணிகள் காரணமாக அண்மைய சில ஆண்டுகளாக சுற்றுச் சூழலைப்பற்றி மக்கள் மத்தியில் ஓரளவுக்கு உணர்வு காணப்படுகின்ற போதிலும், அரசியல் தலைமைத்துவங்கள் இதுவிடயத்தில் போதியளவு அக்கறை காண்பிக்காததால் கணிசமான முன்னேற்றம் ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கவில்லை. சுற்றுசூழல் முக்கியத்துவத்தைப் பொறுத்த மட்டில் ஒவ்வொரு தனிமனிதனின் உள்ளத்திலும் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டியது மனிதன் உணர்ந்து கருமத்தை ஆற்ற வேண்டியதும் முக்கியமானதாகும்.

### சூழல் பாதுகாப்பு முயற்சிகள்

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில், ஒவ்வோர் ஆண்டும் ஒரு குறிப்பிட்ட கருப்பொருளின் அடிப்படையில் சுற்றுச் சூழல் தினம் கொண்டாடப்படுகிறது. அதற்கேற்ப இளைஞர்களும், குழுக்களும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், தொழில் வர்த்தக ஊடக அமைப்புகளும், சுற்றுச் சூழலை மேம்படுத்தி அதைப் பாதுகாப்பதில் தங்களின் உறுதிபாட்டை வெளிப்படுத்தும் விதமாக நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. புவி வெப்பமடைந்து வருவதும் ஓசோன் படையில் ஓட்டை விழுந்துள்ளது என்ற தகவலும் சுற்றுச் சூழலின் சமநிலையில் ஏற்பட்ட பெரியளவு விளைவுகளாகும். மேலும் சுற்றுச் சூழல் தொடர்பாகக் காலநிலை மாற்றம், புவி வெப்பமடைதல், ஓசோன் படை பாதிப்பு, நன்னீர் வளம், சமுத்திரம், கடற்கரைப் பிரதேசங்கள், காடழிப்பு, வனாந்திரமாக்கல், உயிரியல் மாறுபாடு, உயிரியல் தொழில்நுட்பம், சுகாதாரம், இரசாயன பாதுகாப்பு போன்றவற்றில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

### உறுதியெடுப்பது அவசியம்

உலக சுற்றுச்சூழல் தினமான இன்று நாம் சில



உறுதிமொழிகளை எடுப்பது அவசியமானது. சொர்க்கமாக இருந்த பூமி கொஞ்சம் கொஞ்சமாக நரகமாகிக் கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் வேறு யாரும் அல்ல மனிதர்களாகிய நாம்தான். நாம் என்ன செய்தோம் என்று மட்டும் கேட்காதீர்கள். பூமியை பற்றி கவலை இல்லாமல் மரங்களை வெட்டிக் கட்டடங்கள் கட்டுவது, வாகனங்கள், தொழிற்சாலைகளில் இருந்து மண்டலம் மண்டலமாகப் புகையை வெளியேற்றி ஓசோன் படலத்தைக் கெடுப்பது எனப் பல காரியங்களைச் செய்து பூமியை அழித்துக் கொண்டிருக்கும் பெருமை எங்களையே சேரும். ஆண்டுக்கு ஒரு முறை சுற்றுச்சூழல் தினத்தன்று மட்டும் சுற்றுச் சூழலை எப்படி பாதுகாப்பது, மரங்கள் நடுவது பற்றி பேசினால் போதாது. சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது அதனால் என்ன என்ற அலட்சியத்தை முதலில் நாம் கைவிட வேண்டும். இதில் முதல் அடியைப் பிளாஸ்ரிக்கில் எடுத்து வைக்க வேண்டும். பொருள்கள் வாங்கக் கடைக்குச் செல்லும் போது துணிப் பைகளை எடுத்துச் செல்ல வேண்டும். பிளாஸ்டிக் பயன்பாட்டை உடனடியாக நிறுத்திக் கடலும் நிலமும் மாசுபடாதிருக்க வழிசமைப்போம்.

# புவியைப் பாலைவனமாக்குவதால் மனித குலத்துக்குத்தான் பேராபத்து

திருமதி பிருந்தா மயூரன் BA (Hons)



இயற்கையை பாதுகாத்தல்,சுற்றுச்சுழல் பற்றிய விழிப்புணர்வை உலக மக்களிடம் ஏற்படுத்தல், சுற்றாடல் கல்விக்கு அழுத்தம் கொடுத்தல், உலக நாட்டு அரசியல் தலைவர்களிடமும் சூழல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை நோக்கி நகர்தல்,ஒவ்வொரு நாடுகளிலும் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு மக்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் ஊக்குவித்தல், சூழல் தொடர்பான விடயங்களில் மக்களிடம் நேர்வகையான எண்ணங்களை உருவாக்குதல்,போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 5ஆம் திகதி உலக சுற்றுச்சூழல் தினமானது ஐக்கிய நாடுகள் சபையின் உப அமைப்பான ஐக்கிய நாடுகளின் சூழல் திட்டம் (UNEP) எனும் அமைப்பால் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இவ் அமைப்புடன் இணைந்து இளைஞர் குழுக்கள், தன்னார்வத. தொண்டர்கள், தொழில் வர்த்தக அமைப்புகள், தனியார் நிறுவனங்கள், சூழல் சார் அமைப்புக்கள் என்பனவும் சுற்றுச்சுழலை மேம்படுத்தி அதை பாதுகாத்துத் தங்கள் உறுதிப்பாட்டை மேம்படுத்துவதற்காக பலவித நிகழ்வுகளைகளை நடத்தி வருகின்றார்கள்.

1972ஆம் ஆண்டு சுவீடன் நாட்டின் தலைநகராகிய ஸடொக்ஹோமில் நடைபெற்ற மனித குடியிருப்பும் சுற்றாடலும் எனும் மாநாட்டில் உலக சுற்றுச்சுழலின் முக்கியத்துவம், இயற்கை வளங்கள், அவற்றின் பிரயோகங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டது. இம் மாநாட்டின் முடிவில் ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 5ஆம் திகதியை உலக சுற்றுச்சுழல் தினமாக அனுஷ்டிப்பது எனத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

ஒவ்வொரு வருடமும் உலக சுற்றுச்சூழல் தினம் ஒவ்வொரு தொனிப்பொருளின் கீழ், மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு நாடுகளிலும் கொண்டாடப்பட்டுவருகின்றது. அந்த வகையில் இந்த வருடத்துக்கான (2020) சுற்றுச்சுழல் தினத்தின் தொனிப்பொருள் 'உயிர்பல்வகைமை' என்பதாகும். உயிர்பல்வகைமை பாதிப்படையும் போது புவியின் சுழல்,வளி, நீர் சமநிலைகள் பாதிப்படைந்து புவி சமநிலை பாதிப்படைகின்றது. புவி சமநிலையினை சீராக பேணுவதற்காக உயிரின பல்வகைமையினை சீராக பேணவேண்டும் எனும் விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டதாகும். இத்தினத்தை கொலம்பியாவில் ஜேர்மன் நாட்டுடன் இணைந்து அனுஷ்டிக்கப்படுகின்றது.

சுற்றுச்சூழல்மாசடைவுஎன்பதுஉலகின்மிகப்பெரிய பொரிய பொருளாதார, சமூக, சூழல் பிரச்சனையாகவே உள்ளது. 1750 ஆம் ஆண்டளவில் ஏற்பட்ட கைத்தொழில்புரட்சியின் விளைவாக மனிதனது தேவைகள், வாழ்க்கைத்தரங்கள் உயர்வடைந்தமையால் புதிய புதிய கைத்தொழிற்சாலைகள், நவீன போக்குவரத்து வசதிகள் வளர்ச்சியடைந்துள்ளன. இவற்றினால் வெளியிடப்படும் திண்ம, திரவ, வாயு கழிவுகள் எந்த வித சுத்திகரிப்பும் இல்லாமல் சூழலுக்கு நேரடியாக விடப்படுகின்றன். இதனால் சுற்றுச்சூழல் மிக வேகமாக மாசடைந்து வருகின்றது. எனினும் சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் மக்களிடம் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னமே உருவாகியுள்ளது. மனிதனது நிலைத்து நிற்கும் அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகள் இல்லாமையால் சூழலில் பல்வேறுபட்ட பாதிப்புக்கள் ஏற்பட்டு பல இயற்கை



அனர்த்தங்கள் ஏற்பட்டு வருகின்றது.

இயற்கைவளங்களான நீர்நிலைகள், காடுகள், வனாந்தரங்கள், வனசீவராசிகள், வளிமண்டலங்கள், பறவைகள், சோலைகள், கடற்கரைகள் என அனைத்தும் மனிதனுக்காக வடிவமைக்கப்பட்ட பொக்கிசங்களாகும். இவை மனிதனுக்கு மாத்திரம் அல்லாமல் பறவைகள், விலங்குகள், கடல்வாழ்உயிரினங்கள் தாவரங்கள் என அனைத்தினதும் உயிர்வாழ்க்கையும் சூழல் சமநிலையிலேயே தங்கியுள்ளது. சூழல் சமநிலையில் ஏற்படும் மாற்றங்கள், நவீனவிஞ்ஞான தொழில்நுட்பம், கைத்தொழில்துறையின் வளர்ச்சி, கைத்தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் இரசாயனக் கழிவுகள், திண்மக் கழிவுகள், நச்சு வாயுக்கள், நவீன போக்குவரத்த. வசதிகள் என்பன நிலம், நீர் வாயு என அனைத்தினையும் மாசுபடுத்துகின்றது. இவை சூழலில் மட்டுமல்லாது உயிரினங்களின் வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாகவும், ஆபத்தாகவும் உள்ளது. தாவரங்கள், விலங்குகள், பறவைகள் என அனைத்தினையும் விட சிந்தித்து செயற்படும் ஆற்றலைக் கொண்ட மனிதன் சுற்றுச் சூழலை பாதுகாக்கும் பொறுப்புடையவன். இயற்கைச் சூழலை நினைத்தவாறு பயன்படுத்தும் உரிமை மனிதனுக்கு இல்லை. சுற்றுச் சூழலைபாதுகாக்காமல்செயற்பட்டதனால் மனிதன் பல்வேறு இயற்கை அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கவேண்டி ஏற்படுகின்றது. குறிப்பாக வெள்ளப்பெருக்கு, வரட்சி, நிலச்சரிவுகள், சூறாவளி எனப் புவியின் அனைத்துப் பகுதிகளிலும் ஒவ்வொர்நிமிடமும்ஒவ்வொருஅனர்த்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது. விருத்தியடைந்த நாடுகளில் சுற்றுச்சூழலின் முக்கியத்துவத்தை ஒவ்வொருமனிதனும்உணர்ந்துசெயற்படுகின்றமையால் விவசாயம், கைத்தொழில் என அனைத்து செயற்பாடுகளிலும் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியை முன்எடுத்து வருகின்றார்கள்.

> நிலைத்து நிற்கும் அபிவிருத்தியில் மரங்களின் இருப்பு மிக முக்கியமானதாகும். சுற்றுச்சூழலை சமநிலையாக பேணுவதற்கும், மாசடைந்த சுற்றுச்சூழலை மீண்டும் புத்துயிர் வழுங்கு வதற்கும் மரங்கள் மிக அவசியமானவை என்பதை மனிதர்கள் உணர்வதில்லை. மரங்கள் அழிவடைவதால் உயிரினங்கள் அனைத்தும் சுவாசிப்பதற்கு தேவையான ஒட்சிசன் வாயுவின் பற்றாக்குறை ஏற்படும்.

நிலைத்து நிற்கும் அபிவிருத்தியில் மரங்களின் இருப்பு மிக முக்கியமானதாகும். சுற்றுச்சூழலை சமநிலையாக பேணுவதற்கும், மாசடைந்த சுற்றுச்சூழலை மீண்டும் புத்துயிர் வழங்குவதற்கும் மரங்கள் மிக அவசியமானவை என்பதை மனிதர்கள்உணர்வதில்லை. மரங்கள்அழிவடைவதால் உயிரினங்கள்அனைத்தும்சுவாசிப்பதற்குதேவையான ஒட்சிசன் வாயுவின் பற்றாக்குறை ஏற்படும். தாவரங்கள் தமது சுவாசத்தின் போது காபனீர்ஒட்சைட்டு வாயுவை உள்எடுக்கின்றது. இதனால் வளிமண்டலத்தில் காணப்படும் காபனீர்ஒட்சைட்டு வாயுக்களின் அளவு கட்டுப்படுத்தப்பட்டு வளிமண்டலத்தில் காணப்படும் பச்சைவீட்டு வாயுக்களின் அளவு பேணப்பட்டு புவி பாதுகாக்கப்படுகின்றது.

தாவரங்கள் தமக்கு தேவையான உணவை தாமே உற்பத்தி செய்கின்றன. புவியில் காணப்படும் அனைத்து உயிரினங்களுமே தமது உணவுக்காக தாவரங்களிலேயே தங்கியுள்ளன. அத்துடன் தாவரங்களின் ஆவியுயிர்ப்பு செயன்முறையினாலேயே மழைவீழ்ச்சி கிடைக்கின்றது. தாவரங்கள் அழிக்கப்படும்போதுஉயிரினங்களின்சுவாசத்துக்கு தேவையான ஒட்சிசன்வாயு, உணவு, மழைவீழ்ச்சி போன்றவற்றின் அளவும் குறைவடைந்து உயிரினங்கள் இறக்க வேண்டி ஏற்படுகின்றது.

எனினும் மனிதர்கள் தாவரங்களையும், காடுகளையும் அழித்து புவியை பாலைவனமாக்கி வருகின்றார்கள். உலகில் உள்ள காடுகளில் பெரும்பகுதி தற்போது மனிதனது பொறுப்பற்ற நடவடிக்கைகளால் அழிக்கப்பட்டு விட்டது. இதனாலேயே சுற்றுச்சூழல் ஆர்வலகர்கள் மரங்கள், காடுகளை அழிப்பதற்கு எதிராகப் போராடி வருகின்றார்கள். சுற்றுச்சூழலைசமநிலை



யில் பேணுவதற்கும் எமது எதிர்கால சந்ததியினர் நலமுடன் வாழ்வதற்கும் நாம் இயற்கை தாரவரங்களையும், காடுகளையும் பேணிப்பாதுகாப்பது மிக முக்கியமானதாகும்.

சூழல்சமநிலையினை பேணுதல், நிலைத்து நிற்கும் அபிவிருத்திகள் என்பன நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. காலநிலைமாற்றம், புவிவெப்பமடைதல்,ஓசோன்படை தேய்வு, வரட்சி, வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, காடுகளை அழித்தல், நிலம், நீர், வளி மாசடைதல் போன்ற பாதிப்புக்கள் யாவும் சுற்றுச்சூழல்சமமின்மையாலேயேநிகழ்கின்றன.சுற்றுச்சூழலை பாதுகாத்தல் என்பது சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கு மாத்திரமே பொதுவான செயற்பாடுகள் அல்ல. பெரும்பாலும் விருத்தியடைந்துவரும் நாடுகளில் உருவாக்கப்படும் திட்டங்கள் பெரும்பாலும் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி சார்ந்தாகக் காணப்படவில்லை. விருத்தியடைந்துவரும் நாடுகளில் வேலையில்லா பிரச்சினை, வறுமை, அதிகரித்துவரும் சனத்தொகை, சுகாதார – மருத்துவ வசதிகளின் பற்றாக்குறை, உட்கட்டுமான வசதிகளின் பற்றாக்குறை, சமூக ஏற்றத்தாழ்வுகள் எனப் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. இவற்றை நாம் நிலைத்துநிற்கும் அபிவிருத்தி மூலமாக ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடியும் என UNEP யின் முன்னாள் நிர்வாக கணிப்பாளர் கலாநிதி முஸ்தபா கே.டோல்பா குறிப்பிடுகிறார்.

சுற்றுச்சூழலின் முக்கியத்துவத்தை பொறுத்தமட்டில் ஒவ்வொரு தனிமனிதர்களின் உள்ளத்திலிலும் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலமாகவே சுற்றுச்சூழலை பாதுகாக்க முடியும்.



# புவியில் மனித நிலைத்திருப்புக்கு சூழலை பாதுகாப்பது அவசியம்!

இ.தர்மேந்திரா
(சூழலியல் ஆர்வலர்)
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம் –
கண்டாவளை

இன்று சர்வதேச சூழல் தினமாகும். சூழலைப்பற்றிய கரிசனை மனிதனுக்கு ஏற்பட வேண்டும் எனும் நோக்கில் ஜூன் 5 சர்வதேச சூழல் தினமாக ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

1972இல் சுவீடனில் ஸ்டொக்ஹோம் நகரில் இடம்பெற்ற 'மனிதனும் மனித குடியிருப்பும்' என்ற மாநாட்டில் சுற்று சூழல் தொடர்பாகவும் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்டுவரும் ஆபத்துக்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. இம்மாநாட்டின் முடிவில் ஒவ்வொரு வருடமும் ஜூன் 5 உலக சூழல் தினமாக நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டது. இவ் உலக சூழல் தினத்தினை நடைமுறைப்படுத்தி அதன் செயற்பாடுகளை முன்னெடுக்க ஐக்கிய நாடுகளின் சூழல் திட்டம் ( UNEP) செயற்படுகின்றதது.

உலகில் சூழல் பாதிப்பு இன்று வெகுவாக ஏற்பட்டு வருவதனைக் காணமுடிகின்றது. ஆரம்பகாலத்தில் சூழல் மனிதனை ஆதிக்கப்படுத்தியது. இன்று சூழலை மனிதன் ஆதிக்கப்படுத்தும் தன்மையே வெகுவாக காணப்படுகிறது.

இந்தப் புவி அனைத்து உயிரினங்களுக்கும் சொந்தமானது. இப்புவியில் பறவைகள், விலங்குகள், ஊர்வன, நீர்வாழ் உயிரினங்கள், நுண்ணுயிர்கள், மரம், செடி, கொடி என கோடிக்கணக்கான உயிரினங்கள் வாழுகின்றன.

இந்த உலகினை மனிதன் தனக்கு மட்டுமே சொந்தமானது என நினைக்கின்றான். புவியில் வாழும் ஏனைய உயிரினங்களை அழித்து அல்லது ஒடுக்கி மனிதன் தான் பலம்மிக்க ஒரு சக்தியாக தன்னை வெளிக்காட்டி வருகின்றான். சூழலுக்குத் தான் செய்கின்ற பாதிப்புக்களின் எதிர்மறை விளைவுகள் தனக்கே ஆபத்தாக மாறும் என்ற சிந்தனை மனிதனுக்கு



இல்லை.

மனிதனின் சூழல் மீதான ஆதிக்கத்தின் காரணமாக இன்று சூழல் சமநிலை அழிவடைந்து வருகின்றது. இயற்கை வளங்களான காடுகள், நீர்நிலைகள், வளிமண்டலம் மற்றும் நிலமண்டலம் என்பன வெகுவாகப் பாதிக்கப்படுகின்றன.

உலகின் நுரையீரலாக கருதப்படும் காடுகள் இன்று பெருமளவில் அழிக்கப்பட்டு விட்டன். இக்காடுகள் அழிவடைவதில் மனிதனுடைய நடவடிக்கைகளே பெருமளவில் காரணம் எனலாம். நகராக்கம், குடியிருப்புக்களை அமைத்தல், காடுகளுக்கு தீவைத்தல், வீதி அபிவிருத்தி, விவசாயம் மற்றும் கைத்தொழில் தேவைகளுக்காக மரங்களை வெட்டுதல் போன்ற செயற்பாடுகளால் உலகில் உள்ள காடுகள் பெருமளவு அழிக்கப்பட்டுவிட்டன. காடுகள் அழிக்கப்படும் போது மரங்கள் மட்டும் அழிவடைவதில்லை. அங்குள்ள விலங்குகள், பறவைகள், ஊர்வன போன்ற பலவற்றின் வாழ்விடங்களும் அழிக்கப்படுகின்றன. உலகில் நிமிடத்திற்க்கு 130 ஏக்கர் காடு அழிக்கப்படுவதாக ஆய்வென்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகில் மிகவும் முக்கியமான மழைக்காடுகளாக் அமேசன் மற்றும் கொங்கோ காடுகள் காணப்படுகின்றன இக்காடுகளும் இன்று அழிவடைந்து கொண்டே வருகின்றது. உலகில் 30 சதவீதம் காடுகள் உள்ளன. இக்காடுகளை நம்பி 140 கோடி மக்கள் தமது அன்றாட ஜீவனோபாயத்தை நடத்துகின்றனர்.

மனிதனின் நடவடிக்கைக் காரணமாக நீர் நிலைகளும் வெகுவாக மாசடைந்துள்ளன. உலகில் காணப்படும் தரை மேற்பரப்பு நீராகிய கடல்கள், சமுத்திரங்கள், குளங்கள், ஏரிகள், வில்லுகள் போன்றவற்றில் காணப்படும் நீரும், தரை கீழ் நீரும் மனிதனின் தவறான நடவடிக்கைகள் காரணமாக மாசடைந்துள்ளது. அதிகளவான சுற்றுலா பயணிகளால் பெருமளவான பிளாஸ்ரிக் கழிவுகள் நீர் நிலைகளில் சேர்க்கப்படுகின்றன. எண்ணைத் தாங்கிக் கப்பல்கள் சமுத்திரங்களில் விபத்துக்குள்ளாகின்றன. அணுவாயுதங்கள் நீருக்குள் பரிசோதிக்கப்படுகின்றன. கழிவுப்பொருள்கள் நீருக்குள் கொட்டப்படுகின்றன. இத்தகைய நடவடிக்கைகளால் நீர் பெருமளவில் மாசடைந்து வருகின்றது. இதைவிட தரைக்கீழ் நீரினை மனிதன் அதிகளவில் எடுப்பதன் காரணமாக அந்த நீர் உவர் நீராக மாறிவருகின்றது.

இதனால் மனிதன் நீரைத் தேடி அலைய வேண்டியுள்ளது. நீரின் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்ய மனிதன் கடல்நீரைச் சுத்தம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்காகப் பாரியளவில் செலவுகளும் ஏற்பட்டுள்ளன. மூன்றாம் உலகயுத்தம் நீருக்கான யுத்தமாக தோற்றம் பெறலாம் என்ற கருத்தியலும் உண்டு

இன்றைய காலகட்டத்தில் வளிமண்டலமும் வெகுவாக மாசடைந்துள்ளது. அதிகரித்த தொழில்சாலைகள், வாகனங்களின் அதிகரிப்பு, குளிரூட்டிகளில் இருந்து வெளியேறும் வாயுக்கள் இதற்கான காரணமாகும். இதனால் வளிமண்டலத்தில் பச்சை வீட்டு வாயுக்கள் தேங்குகின்றது. அடிக்கடி வளியில் தூசுப்படலம் தோன்றவும் இதுவே காரணமாகும்.

இன்றைய காலகட்டத்தில் நிலக்கோளமாசடைவும் ஏற்பட்டுள்ளது. விவசாய இரசாயனங்களைப் பயன்படுத்துதல், தொடர்ச்சியான விவசாயம், அதிகளவான மேய்ச்சல், தாவரப் போர்வைகளை அகற்றுதல், நகராக்கம் போன்றவற்றால் நிலம் பாதிக்கப்படுகின்றது.

இத்தகைய மனித நடவடிக்கைகளால் இன்று பல சூழல் நெருக்கடிகள் தோன்றியுள்ளமையினை அவதானிக்க முடிகின்றது.

புவியின் வெப்பம் வெகுவாக அதிகரித்து வருகின்றமை முக்கியமான ஒரு சூழல் நெருக்கடியாகும். புவி வெப்பம் அதிகரித்தமைக்கு மனித செயற்பாடுகள் தான் முக்கிய காரணியாகும். 1850இன் பின் புவி வெப்நிலை 10 பாகை செல்சியஸ் ஆல் அதிகரித்துள்ளது. வெப்ப அதிகரிப்பானது கடல் மட்டத்தினை உயர்வடைய செய்கின்றது. இதனால் மாலைதீவு போன்ற தீவுகள் நீரில் மூழ்கும் அபாயத்தில் உள்ளன. இதைவிட வெப்ப அதிகரிப்பானது மனிதனுக்கு கண் நோய், தோல் நோய், சுவாசநோய் போன்றவற்றையும் ஏற்படுத்தும்.

காடுகளை அழித்தமையால் அரிய வகைத் தாவரங்கள் அழிவடைந்துள்ளமையுடன் காட்டு வாழ் உயிரினங்களின் வாழ்விடம் பாதிக்கப்பட்டு அவை செய்வதறியாது திண்டாடும் நிலைமை ஏற்படுகின்றது.

கடல் மாசடைந்தமையால் கடல் வாழ் உயிரினங்கள் அழிவடைந்து வருகின்றன.

வளி மாசடைவதால் மனிதனுக்கு சுவாசம் தொடர்பான நோய்கள் ஏற்படுகின்றன.

இச்செயல் முறைகள் மாற்றப்பட்டமையால் உணவுச் சங்கிலி, உணவு வலை போன்றவற்றின் தொடர்புகள் அறுக்கப்படுகின்றன.

இலத்திரனியல் கழிவுகளை முறையற்ற விதத்தில் வீசுவதும் இன்று நெருக்கடியாக மாறுகின்றது.

இத்தகைய சூழல் பிரச்சனை தீர்வுகாண்பதற்கான மாநாடுகள் பல்வேறு காலகட்டத்திலும் நடைபெற்றுள்ள போதிலும் அவற்றில் எடுக்கப்படும் முடிவுகள் சரியாக செயற்படுவதில்லை. உலகளாவிய ரீதியில் காபன் வாயுவை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தபோதிலும் பெரும்பாலானை வளர்முக நாடுகள் கைத்தொழில் பொருளாதாரத்தில் இருந்து பின்வாங்கத் தயாராக இல்லை. இதனால் பல மாநாடுகளில் தீர்மானம் எடுக்கமுடியாது போகிறது.

உலகளாவிய ரீதியில் சூழல் நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக ஐக்கிய நாடுகளின் சூழல் திட்டம் (United Nations Environment Programme) உருவாக்கப்பட்டுள்ளது என்பது, ஐ.நா. சபையின் சூழல் தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கான ஓர் அமைப்பு ஆகும். இது வளர்ந்துவரும் நாடுகள் சூழல் தொடர்பில் பயனுள்ள கொள்கைகளை நிறைவேற்றுவதற்கு உதவுவதுடன், முறையான சூழல்சார் செயல்முறைகள் ஊடானதாங்குவளர்ச்சியையும் ஊக்குவித்து வருகிறது. கென்யாவின் தலைநகரான நைரோபியில் தலைமையகத்தைக் கொண்டிருக்கும் இந்த அமைப்பு, மனிதனும் சூழலும் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டை தொடர்ந்து 1972 ஜூன் மாதத்தில் நிறுவப்பட்டது. ஐக்கிய நாடுகள் சூழல் திட்டத்துக்கு ஆறு உலகப்பகுதி அலுவலகங்களும், பல நாடுகளுக்கான அலுவலகங்களும் உள்ளன.

உலகில் உள்ள பல நாடுகளிலும் சூழல் தொடர்பாக பல உள்ளூர் அமைப்புக்களை கொண்டுள்ளன. அவ் அமைப்புக்கள் அந்த நாடுகளில் உள்ளூர் சட்டங்களை கொண்டுள்ளது.

சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் போதிலும் சூழலுக்கெதிரான மனிதனின் வன்முறை தொடர்ந்து கொண்டே செல்கிறது.

சூழலை நாங்கள் அழித்தால் சூழல் எங்களை அழித்துவிடும் சூழல் மீது போதிய கரிசனை செலுத்தாது விடுவோமாயின் இது பாரிய நெருக்கடியினை மனிதகுலம் எதிர்நோக்கும் இன்றைய சூழல் தினத்தில் அனைவரும் ஒன்றிணைந்து சூழலை பாதுகாக்க உறுதியெடுப்போம்.



நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் **'நோயாளர் காவு வண்டி'** எனும் தலைப்பில் சித்திரங் களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிக மாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்த வர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

# தினம் ஒரு தலைப்பு சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்




படம் 1



படம் 2

*இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.*
*இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு– 'வேள்வி'*



**செந்தூரன் அபிஷ்கன் - தரம் 4**
**யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி**

**படம் 2**
**அபர்ணா உதயகுமார் - தரம் 6**
**David Leeder Middle School, Canada.**

காலைக்கதிர்
Kalaikkathir
வேள்வி
16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு
தினம் ஒரு தலைப்பு
சித்திரப்போட்டி



இன்று (05/06/2020) தலைப்பு
வேள்வி

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோ ரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முக வரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

லனுஜன் நவரட்ணம் – தரம் 3
North Bridlewood Junior Public School, Scarboough, Canada

இ. கார்த்திகன் – தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

பா. தனுபன் – தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

அ. க. ரிஷாளன் – தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

வி. அவிக்ஷிகன் – தரம் 1
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

ரி. லோகவருஷ்ஜினி – தரம் 7
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

எஸ். கெவின் பீட்டர் – தரம் 3
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

உ. ஆராதனா – தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

உ. ரோஷித் – தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

என். நிருஜிகா – தரம் 4
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

சி. டிஷான் – தரம் 3
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஆர். பிரிதி – தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

பி. பிரவீன் – தரம் 11
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

பி. பிரதிக்ஷன் – தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ராமதாசன் ஹர்சிகா – தரம் 4
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

அத்வைதா கோபிநாத் – தரம் 1
தி/ செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம்

விவேகானந்தன் லுகேசிகன் – தரம் 7
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

என் வித்யாசாகர் – தரம் 9
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஞா. ரிசாந் – தரம் 3
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஆர். யதுஷன் – தரம் 7
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஏ. ஜெஷுரன் – தரம் 4
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

என். ஷெர்லின்
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

வி. சலோமி – தரம் 6
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

அன்றியா தக்ஷரா காண்டீபன் – தரம் 2
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

ப. சஜிதன் – தரம் 9
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ரி. லொகீத் – தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

சி. சிவகலை – தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

பி. ரொமிரேஷ் – தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

சந்திரகுமார் அவினாஷ் – தரம் 4
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

கங்கை சூடி சஜெந்தன் – தரம் 8
தி/ செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம்

பி. துர்ஷிகா – தரம் 6
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

அ. அத்விஹா – தரம் 5
தி/ சிறி சண்முகா இந்து மகளிர் கல்லூரி

மாதுரி மகிந்தன் – தரம் 8
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

தி. கோவெழிலன் – தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

லோ. நித்திலா – தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

த. கபிலாஷ் – தரம் 8
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

ஏ. அக்சயன் – தரம் 6
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

த. யதுனேஷ் – தரம் 4
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

ஏ. அனன்யா – தரம் 2
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

இ. லதுஷன் – தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

எஸ். ஆ. எஸ். பர்வின் – தரம் 8
ஹிஜ்ரா முஸ்லிம் கனிஷ்ர வித்தியாலயம், அம்பன்பொல

வி. கேதிஷா – தரம் 2
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

வி. கேது பிரியன் – தரம் 7
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

வன்முறை பாதித்த பெண்கள், சிறுவருக்கு உதவ

# கனேடிய அரசு இலங்கைக்கு 4 லட்சம் டொலர் நிதி உதவி

இலங்கையில் குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் அவசியமான உதவிகள் மற்றும் பராமரிப்பை வழங்குவதற்கென கனேடிய அரசு 4 இலட்சம் கனேடிய டொலர்கள் நிதியுதவியை வழங்கியிருக்கிறது.

கொரோனா பெருந்தொற்றுப் பரவலை அடுத்து, இலங்கையில் அதிகரித்திருக்கும் பெண்கள் மீதான குடும்ப வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் வகையிலும், அவற்றிலிருந்து பெண்கள் மற்றும் சிறுவர்களைப் பாதுகாப்பதற்காகவும் ஐக்கிய நாடுகளின் குடித்தொகை நிதியம் பல நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில் இலங்கையில் பெண்கள் மீதான வன்முறைகளைத் தடுத்தல் மற்றும் உரிய பாதுகாப்பு சேவை வழங்கல்களை ஏற்படுத்துதல் என்பவற்றுக்காக இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிட் மெகினொன் 4 இலட்சம் கனேடிய டொலர்களை ஐக்கிய நாடுகள் குடித்தொகை நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி ரிட்சு நக்ஸனிடம் நேற்றுக் கயைளித்தார்.

இலங்கையின் சுகாதார அமைச்சு, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு ஆகியவற்றுடன் பேச்சு நடத்திய பின்னர் வைத்தியசாலைகளில் குடும்ப வன்முறைகள் காரணமாகப் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அவசியமான சிகிச்சைகளை வழங்குவதற்கும், பராமரிப்பதற்குமான வசதிகளை ஏற்படுத்துவதற்கு இந்த நிதி செலவிடப்படவுள்ளது. அத்தோடு பெண்கள் மீதான வன்முறைகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமான ஊடக விளம்பரங்களை மேற்கொள்ளல், கர்ப்பிணிகளுக்கான மருத்துவ பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் கொரோனா




வைரஸ் தொற்றுநோய் காரணமாக பெண்கள் எதிர்கொண்டிருக்கும் சமூக, பொருளாதாரத் தாக்கங்களை ஆராய்தல் என்பவற்றுக்காகவும் இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று ஐக்கிய நாடுகள் குடித்தொகை நிதியத்தின் அலுவலகம் அனுப்பி வைத்துள்ள ஊடகக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஒட்டுமொத்த நாடும் முடக்கப்பட்டமையால் ஏற்பட்ட பொருளாதார ரீதியான அழுத்தம் ஒருபுறமிருக்க, பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளமை கவலைக்குரிய விடயமாகும். எனவே இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய பராமரிப்பை வழங்குவதற்கான நடவடிக்கைகளில் இலங்கைக்கு உதவத் தயாராக இருக்கிறோம் என்று இந்த நிதியுதவி தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள கனேடியத்தூதுவர் டேவிட் மெக்கினொன் தெரிவித்துள்ளார்.

## ரயில் சேவைகள் மீண்டும் திங்கள் முதல் வழமைக்கு!



கொழும்பு, ஜூன் 5.

எதிர்வரும் 8ஆம் திகதி, திங்கட்கிழமை முதல் நாடு முழுவதும் ரயில் சேவைகள் வழமைக்குத் திரும்பவுள்ளன. எனினும் கொழும்பு – பதுளை இடையேயான தேனுவாரா மெனிகே மற்றும் கொழும்பு – காங்கேசன்துறை இடையிலான குளிரூட்டப்பட்ட இன்ரசிற்றி புகையிரத சேவை ஆகிய இரண்டும் எதிர்வரும் 8ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்பட மாட்டாது என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. 8 ஆம் திகதி முதல் வழமையான நேர அட்டவணையின் படி ரயில் சேவைகள் இடம்பெறவுள்ளன.

நாட்டில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் பெருந்தொற்றுக் காரணமாக நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் கடந்த மார்ச் 20ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை அடுத்து அனைத்து ரயில் சேவைகளும் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

அதன்பின், மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான ரயில் சேவைகள் கடந்த மாதம் தொடக்கம் இடம்பெற்றன. இந்த நிலையில், எதிர்வரும் ஜூன் 8ஆம் திகதி முதல் பொது போக்குவரத்தை மீண்டும் தொடங்குவதற்கு அரசு முடிவு செய்துள்ள நிலையில், ரயில் சேவைகள் வழமையான அட்டவணைப்படி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சசிகா லேணர்ஸ்




முறையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புகளும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.

தலைமை காரியாலயம்.
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HotLine - 077 722 6847
021 221 7678
077 614 0361
Sasika Learners
Sasika Driving Schoolgmail.com

THE SASIKA LEARNERS

அரச அதிகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

கிளை நிறுவனங்கள் –

வேலணை
வங்களாவடிச் சந்தி,
வேலணை
021 221 5472
070 301 3012

காரைநகர்
021 225 2454
070 510 2484

கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்.
021 224 3393
070 301 3014

பண்டத்தரிப்பு
021 225 2333
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
070 301 3016

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி
021 226 0999
071 775 0999

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு
கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
021 221 5472
07 301 3012

கோவை நந்தன்

# சயனைட் அருந்தி வீரச்சாவடைந்த முதல் போராளி தியாகி பொன். சிவகுமாரனின் நினைவுதினம் இன்று





ஈழவின மக்கள் வாழுகின்ற இந்த சின்னம் சிறிய தீவில் 1956ம் ஆண்டு சிறிலங்காவின் அன்றைய அரசால் கொண்டு வரப்பட்ட சிங்களம் மட்டும் என்கின்ற சட்டம், அதைத் தொடர்ந்து 1971 இல் திட்டமிட்டு தமிழ் மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கல்வி மீதான தரப்படுத்தல் சட்டம் ஆகிய இரண்டும்தான், தமிழர்கள் இனரீதியாக ஆளும் பெரும் பான்மை சிங்கள அரசுகளால் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதனை பகிரங்கமாக வெளிப்படுத்தி நின்றன.

தமிழ் இளைஞர்களை சிங்கள அரசுகளுக்கு எதிராக கிளர்ந்தெழுந்து போராட வைத்த அடக்குமுறைகளின் ஆரம்ப புள்ளி இந்த இரண்டும்தான். இவற்றின் வெளிப்பாடாக குறிப்பாக பல்கலைக் கழக அனுமதியில் தமிழ் மாணவர்களுக்கு எதிரான தரப்படுத்தல் சட்ட மூலத்தை எதிர்த்து 1971 ஆம் ஆண்டு தமிழ் மாணவர் பேரவை என்கின்ற அமைப்பு உருவாகி, தமிழ் மாணவர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு , முதன் முதலில் யாழ்ப்பாணத்தில் மாபெரும் மாணவர்களின் எழுச்சி ஊர்வலம் ஒன்று நடாத்தபட்டது.

இளஞர் எழுர்சியின் முதல் முன்னெடுப்பாகிய இந்தப் போராட்டத்தை முன்னின்று ஒருங்கிணைத்ததில் முக்கிய பங்கு வகித்ததில் இருந்து ஆரம்பமாகிறது தியாகி பொன் சிவகுமாரனின் வீர வரலாறு.


பின்னர் 1974 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண வீரசிங்க மண்டப முன்றிலில் நடைபெற்றுக் கொண்டிருந்த 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வின் போது அரச காவல்துறையினர் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் 11அப்பாவித் தமிழர்கள் அந்த இடத்திலேயே கொலை செய்யப்பட்ட கொடுரத்தை நேரில் பார்த்ததில் இருந்து வீறு கொண்ட வேங்கையாக அரச காவல்துறையினர் மீதான தாக்குதல்களை ஆரம்பிக்கிறான் தியாகி சிவகுமாரன்.

சிறிலங்கா காவல் துறையினரால் தேடப்பட்டு வந்த தியாகி பொன், சிவகுமாரன் 1974 ஜூன் 5ஆம் நாள் முக்கிய தாக்குதல் ஒன்றிற்கான தயாரிப்புகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது பொலிஸாரினால் சுற்றிவளைக்கப்படுகிறான். சிங்களக் காவல் துறையிடம் உயிருடன் பிடிபடக் கூடாது என்பதற்காக தன் வசம் என்றும் வைத்திருக்கும் சயனைட் குப்பியை கடித்து தன உயிரைத் தானே மாய்த்துக் கொள்கிறான் - அந்தக் கணதிலேயே. உரிமைப் போராக ஆரம்பித்து பின்னர் விடுதலைப் போராக வளர்ச்சி பெற்ற ஈழப் போரில் முதன் முதல் நஞ்சருந்தி வீரச்சாவடைந்த முதல் போராளி என்கிற பெருமையை பெறுகிறான் சிவகுமாரன்.

எமது தேசத்தின் நாளைய தூண்களான மாணவ சமூகமே நாளைய எம் நாட்டைக் கட்டியெழுப்பும் இளைய சிற்பிகள். மாணவப் பருவத்திலேயே எமது இனத்தின் விடியலிற்காய் தம் உயிரை அர்ப்பணம் செய்தவர்களில் தியாகி சிவகுமாரன் முதல் இடம் பெறுகிறான். 1950 ஒகஸ்ட் 26இல் உரும்பிராய் பொன்னுத்துரை - அன்னலட்சுமி தம்பதிகளின் மகனாகப் பிறந்த சிவகுமாரனின் உருவச்சிலை மூன்று தடவைகள் ஸ்ரீலங்கா இராணுவதினரால் உடைக்கப்பட்டது.

இறுதியாக இன்று உரும்பிராய் சந்தியில் வெண்கலத்தில் மின்னிக் கொண்டிருக்கும் அவனது நான்காவது திரு உருவச்சிலை, 1999 ஆம் ஆண்டு பலத்த இராணுவக் கெடுபிடிகளின் மத்தியிலும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினரால் வடிவமைத்து நிறுவப்பட்டு டக்லஸ் தேவானந்தாவினால் திறந்து வைக்கபட்டது வரலாறு.



## தற்கொடையின் தாய்மகன் சிவகுமாரன்

**தியாகி சிவகுமாரன் 46ஆம் ஆண்டு நினைவு இன்று ஆகும்.**

அம்பிளாந்துறையூர் அரியம்

**தற்கொடையின் தாய்மகன் சிவகுமாரன்**
**தாயகவிடுதலைக்காய் ஆகுதியானார்**
**தியாகத்தின் முதல் தற்கொடையாளன்**
**தீயென சூழ்ந்த இனவாத படைகளுக்கு**

**துணிவுடன் பதில் கொடுத்த உத்தமன்**
**தூயவழியில் கொள்கைதனை ஏற்றவன்**
**தெளிவான பார்வையுடன் பணிசெய்தவன்**
**தேசியத்திற்காய் தன்னையே அற்பணித்தான்**

**தைரியத்தை தமிழ் இனத்திற்கே தந்தவன்**
**தொந்தரவு ஆக்கிரமிப்பை துரத்தியடித்தான்**
**தோலாயர் நேர்ந்து 42, ஆண்டுகள் இன்று**
**தௌதிகம் சிவகுமாரன் புகழ் வாழ்கவே**

# சுற்றுச்சூழலை பாதுகாக்க தவறினால் ...........



(8ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**நீர் மாசடைதல்:-** தொழிற்சாலை கழிவுகள், இரசாயன திரவங்கள் அசுத்த முள்ள நிலையிலும், விசத்தன்மை கொண்ட நிலையிலும் மண்ணில் செலுத் தப்படுவதால் மண்ணின் மகத்துவம் கெட்டு விடுகின்றது. மேலும் பிளாஸ்டிக் பொருள்களும், பொலித்தீன் பைகளும் மண்ணில் புதையுண்டு போவதால் அவை விளைநிலங்கள் மாசுபட்டு வீரி



யம் மிக்க செடி, கொடி தாவரங்களை வளரவிடாமல் தடுக்கின்றன. அத்தோடு மண்வாழ் உயிரிகளும் அழிவடைகின் றன.

**வளிமண்டலம் மாசடைதல் :-** இன் றைய நவீன யுகத்தில் செய்மதிகள், விண் கமெராக்கள், அதி களவிலானசமிஞ்ஞைதரும்பொருள்கள்அவ்வப்போது வாண் வெளியில் ஏவப்படுகின்றன. இவை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மேல் செயலிழந்து விடுகின்றது. மேலும் இந்த விண்கலன்கள் வான்வெளியில் இப் படியே அநாதையாக மிதந்து வருகின்றமையால் புதிய செயற்கைக் கோள்களுக்கு இடையூறு ஏற்படுத் தவதுடன் வான் மண்டலத்தில் குப்பைகளாக சேர்ந்து சுற்ற ஆரம்பிக் கின்றன. இந்த விண்வெளி குப்பை கள் புவியின் ஈர்ப்பு மையத்தை தொடும்போது இவை நிலத்தைநோக்கி இரசாயனக் குண்டுகள் போல வேகமாக வந்து வெடிக்கின்றன. இந்த வெடிப்புக்க ளினால் இந்தப் பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவதுடன் இங்கு கதிரியக்கம் வெளிப்பட்டு மக்களின் உடலில் பல்வேறு நோய்கள் ஏற்படுகின் றன.

**நீர் மாசடைதல் :-** மனிதனின் அத்தியாவசிய நீர்த்தேவையை கிணறு, ஏரி, குளம், குட்டைகள் மற் றும் ஆழ்துளைக் கிணறுகள் நிவர்த்தி செய்கின்றன. தொழிற் சாலை கழிவுகள் மற்றும் மனிதக் கழி வுகள் அதிகமான அளவில் நீர்நிலைக ளில் நேரடியாக் கலப்பதால் நீர் மாசுபடு வதுடன் அந்த நீரை பருகுவதால் உடல் நோய்களும், மனித பயன்பாட்டிற்கு உபயோ கிப்பதால் தோல் நோய்களும் ஏற்படுகின்றன. இவை மனிதனுக்கு மட் டுமல்லாமல் பல்வேறு கால் நடைகளுக் கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இது மட்டுமன்றி கடல், சமுத்திரம் போன்ற வற்றில் குப்பை கள் மற்றும் கழிவுப் பொருள்களை வீசுவதனால் அவை மாசுபடுவதோடு, அங்கு வாழ்கின்ற உயிரி னங்களும் பாதிக்கப்படுகின்றது.

**புவி வெப்பமடைதல் :-** தாவரங்கள், காடுகள் போன்றவற்றை மனிதன் அழிக்கின்றான். புவி வெப்பமடைதலை தட்ப் வெப்பநிலை மாறுபடுவதை மையமாக வைத்து கூறமுடியும். அதாவது புவி நிலப்பரப்பில் நிலம், நீர், வளி ஆகியன மாசுபடுவதால் புவியின் தட்ப வெப்பத் தில் குளறுபடியை ஏற்படுத்தி, அண்டாட் டிக்கா போன்ற பனிப்பிரதேசங்களை உருகச்செய்கிறது. இதனால் கடல் சீற்றங்கள் ஏற் படுவது மட்டுமின்றி சிறிய குட்டித் தீவுகள் கடலில் மூழ்கிவிடுகின்றன. மேலும் உலக வெப்ப மயமாதல் போன்ற பேரழிவுகளுக்கு புவி வெப்பமடைதல் ஒரு வகையில் காரண மாக அமைந்து விடுகின்றது.

மனித இனம் கூட்டாக வாழும் இயல் புடையது. அதாவது மனிதன் தனது தேவைகளான பாதுகாப்பு பொருளாதார மேம்பாடு, கல்வி, சுகாதாரம் போன்ற வற்றை விருத்தி செய்து கொள்ள குடும் பம், சமூதாயம், சமூகம் எனும் அடிப்ப டையில் இணைந்து வாழ்கின்றான். அதேபோல மனிதன் தன்னுடைய அடிப் படைத் தேவைகளான உணவு, உடை மற்றும் உறையுள் என்பவற்றை பெற் றுக்கொள்ள சூழலுடனும் நெருங்கிய தொடர்பை வைத்துள்ளான். இதற்கு உதாரணமாக மரங்களின் துணையோடு வீடு மற்றும் தளபாடம் அமைத்தல், கிழங் குகள், பழங் கள் என்பவற்றை உண்ணுதல், செம் மறியாடுகள் மற்றும் பட்டுப் புச்சி என்பவற்றின் மூலம் பெறப் படும் பொருள்களைக் கொண்டு ஆடைகளை நெய்து அணிதல் என்பவற்றை குறிப்பிடலாம். இவ் வாறான இடைத்தொடர்புகள் மூலமும், நுகர்வுகள் மூலமும் ஏற்படும் தீய விளைவுகளை உணர்ந்து செயற்பட்டு சுற்றுச் சூழல் மாசுபடுவதை தடுப்பது மனித சமூகத்தின் கடமையாகும்.

எனவே மனிதனுடைய செயற்பா டுகள் சூழலில் எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்துகின்றன. மனிதன் தனது வாழ் வியலை மேம்படுத்தும் நோக் கில் மேற் கொள்கின்ற விவசாயம் மற்றும் கைத் தொழில் சார்ந்த பொருளா தார நடவடிக் கைகளுக்கு பல்வேறு தொழிநுட்பங் களை பயன்படுத்துகின் றான். உதாரண மாக சமுத்திரத்தின் மேல் விவசா யம் செய்தல், இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தி கனிய வளங்களை அகழ்தல் என்பவற்றைக் குறிப் பிடலாம். இவ்வாறான நடவடிக்கைகளால் சுனாமி, எரிமலை வெடிப்பு, வெள்ளம், வரட்சி, அமில மழைப் பொழிவு, வாகன விபத்து முத லான அனர்த்தங்கள் உருவாகின்றன. இவை மனிதனுக்கு நீண்டகால மற்றும் குறுகிய கால பாதிப்புக்களை ஏற்படுத்து கின்றன. சூழலில் காணப்படும் நிலம், நீர், வளி ஆகிய உயிரற்ற கூறுகள் மனித வாழ்க்கையினை தீர்மா னிக்கும் காரணி களாகும். இவை தமக்குரிய விகி தாசாரம் அல்லது அளவுகளில் சரியாக இருக்கும் போதுதான் மனித வாழ்வு நீடித்து நிலைக்கின்றது. மாறாக இவ் உயிரற்ற கூறுக ளின் அளவு மாறுபடும் போது அது மனித வாழ்வை நிலைகுலைக்கின் றது.

ஆகவே சுற்றுச்சூழலை பாதுகாத்து, நோய்க் காரணிகளின் தொற்றுக்கு ஆளா காமல், வாழ்நாளை அதிகரித்து மகிழ்வாக வாழ சுற்றுச்சூழல் பற்றிய அவதானம் மற்றும் அறிவு என்பன ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியம்.

## மலர் சொன்ன வார்த்தையால் மலைத்துமே விட்டேன்!

காலையிலே எழுந்தவுடன்
கண்ணெதிரே கண்டேன்
கவலை இன்றிப் பூத்திருக்கும்
கட்டழகு ரோஜா
வேலைசெய்ய விருப்பமின்றி
சோம்பலிலே கிடந்தேன்
விருட்டென்று கேட்டதுமே
வெலவெலத்துப் போனேன்

யாருக்காய் பூக்கின்றோம்
என்று தெரியாது
பூக்கின்றோம் பூக்கின்றோம்
பூத்தபடி நிற்போம்
பூப்பதிலே சோம்பலின்றி
பூதந்து இருப்போம்
பூப்பார்த்த வுடனேயே
பூரிப்பைக் கொடுப்போம்

சோம்பல் வந்துவிட்டதென
சோர்ந்துவிட மாட்டோம்
சுறுசுறுப்பாய் இருந்தபடி
சுகம்கொடுத்து நிற்போம்
சாந்தம் எங்கள்போக்குவென
சகலருக்கும் தெரியும்
சந்தோம் கொடுப்பதுவே
எங்கள் குணமாகும்

மற்றவர் மகிழ்ச்சியுற
மகிழ்ந்து நாம்நிற்போம்
மற்றவர் மனமுடைய
வாழ்நாளில் நினையோம்
சோம்பலுற்று வாழ்வினிலே
சோர்ந்துவிட மாட்டோம்
சொர்க்கத்தைக் காட்டுவதே
சுகமென்று நினப்போம்

விழுகின்ற மலர்பார்த்து
விழுதழுதல் மாட்டோம்
விழுவது எழுவதற்கென
விழித்தெழுந்து நிற்போம்
அழுகின்ற தொழிலைநாம்
அழித்துமே விட்டோம்
ஆனதால் என்றென்றும்
அழகினையே தருவோம்

பறிப்பாரின் கையினைப்
பக்குவமாய்ப் பார்ப்போம்
பறித்தவர்கள் எம்மழகை
பார்த்தபடி நிற்பர்
குறித்தமலர் அழகையவர்
குதூகலத்தால் ரசிப்பர்
கொண்ட்டாட்டம் வந்துவிட்டால்
கொண்டையிலும் வைப்பர்

ஆண்டவனின் அருகினலே
அடைக்கலமும் ஆவோம்
ஆவேசக் கைகளிலே
அசிங்கமும் படுவோம்
ஆனாலும் ஆத்திரத்தை
அடக்கியே வைப்போம்
ஆதலால் என்றுமே
அழகாக இருப்போம்

மலர் சொன்னவார்த்தையால்
மலைத்துமே விட்டேன்
நிலைகுலையா நானும்
நிலைகுலைந்து விட்டேன்
அழகான மலர்சொன்ன
அத்தனையும் கேட்டேன்
அவைசொன்ன அத்தனையும்
அமுதமொழி அன்றோ

மகாதேவஐயர் ஜெயராமசர்மா, மெல்போண்,அவுஸ்திரேலியா

# வடக்கில் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு உடன் முற்றுப்புள்ளி வைக்க நடவடிக்கை!

## வடக்கு மாகாண ஆளுநர் அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 05

வடக்கு மாகாணத்தில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸுக்கும் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், விசேட பொலிஸ் செயலணியின் உறுப்பினர்கள், மாவட்டங்களின் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், மாகாண சுகாதாரப் பணிப்பாளர், மேலதிக மாவட்ட அரச அதிபர்கள், உள்ளூர் அதிகார சபை ஆணையாளர், கல்வித் திணைக்கள செயலாளர், உள்ளூர் அதிகார சபை செயலாளர், போக்குவரத்துத் அதிகார சபை தலைவர் மற்றும் செயலாளர், ஆளுநரின் செயலாளர் மற்றும் உதவிச் செயலாளர் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயகத்தின் கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இதன் போதே ஆளுநர் மேற்படி வேண்டுகோளை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாண பொலிஸார் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவற்காக அர்ப்பணிப்புடன் முன்னெடுத்த அளப்பரிய சேவைகளைப் பாராட்டுக் கின்றேன். தற்போது வடக்கு மாகாணத்தில் சட்டவிரோ தமான முறையில் சமுதாயத்தைப் பாதிக்கின்ற நிகழ் வுகள் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக, சட்டவிரோத மணல் அகழ்வு, சட்டவிரோத மதுபான தயாரிப்பு, மதுபான விற்பனை, களவுகள் மற்றும் வாள்வெட்டு, போதைப்பொருள் துஷ்பிரயோகம், வீதி விபத்துக்கள் ஆகியன தொடர்கின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகின்றது.

முக்கியமாக மணல் அகழ்வை முறையான சட்டங் களுக்கு உட்பத்தி அதற்கான அனுமதிகளை வழங்கி தேவைப்படும் பட்சத்தில் மட்டும் மணல் அகழ்வு செய் யப்பட வேண்டியது அவசியமாகின்றது. மணல் அகழ்வு வியாபாரம் அல்ல என்பதை அனைவரும் மனதில்கொள்ள வேண்டும்.

மாணவர்கள் மற்றும் இளைய சமுதாயத்தைப் பாதிக்கின்ற வகையில் களவு, வாள் வெட்டு, போதைப் பொருள் விற்பனை போன்ற விடயங்களின் பின்ன ணிகள் உள்ளிட்ட அனைத்துக் காரணங்களையும் கண்டறிந்து அவற்றைத் தடைசெய்வதோடு நிலை மை களை முற்றாகக் கட்டுக்குள் கொண்டுவர வேண் டும்.

வீதி விபத்துக்கள் தொடரும் நிலையில் அதற்கான காரணங்களை முழுமையாக ஆராய்ந்து போக்குவரத் துச் சட்டங்களை இறுக்கமாகப் பின்பற்றுவதோடு சட் டத்தை மீறுவோருக்குப் பாரபட்சமின்றி தண்டனை வழங்க வேண்டும்.

இதுபோன்ற சட்டவிரோதமான விடங்களைத் தடுப்பதன் ஊடாகவே எமது மாணவர்களையும், இளம் சந்ததியினரையும், ஒட்டுமொத்த சமுதாயத்தையும் நேரிய முன்னேற்றப் பாதையொன்றில் இட்டுச் செல்ல முடியும்.

அந்தச் செயற்பாட்டை முன்னெடுப்பதற்காக கிராம அலுவலர்கள் முதல் மாவட்ட அரச அதிபர்கள், மேல திக அரச அதிபர்கள் உள்ளிட்டவர்கள் பொலிஸாருக் குப் பூரணமான ஒத்துழைப்புக்களை வழங்க வேண் டும்.

அதன்மூலமே எமது சமுதாயத்தைக் கண்ணிய முள்ள – ஒழுக்கமான சமுதாயமாக முன்னேற்றம் மிக்கதாக மாற்ற முடியும் என்பதைக் கருத்தில்கொள்ள வேண்டும்.

மிக முக்கியமாக பாடசாலைகளில் மாணவர்களுக் கான விழிப்புணர்வு நிகழ்வுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும். அத்துடன் பாடசாலை மாண வர்களுக்காகப் பாடசாலை கால அட்டவணையையும், அரச மற்றும் தனியார் பஸ்களின் கால அட்டவணையை யும் ஒருங்கிணைத்து ஒரு புதிய கால அட்டவணை யைத் தயார் செய்து நடைமுறைப்படுத்த போக்குவரத் துத் அதிகார சபை நடவடிக்கை மேற்கொள்ள வேண் டும்.

சமுதாய நலனில் அக்கறைகொள்ள வேண்டிய மாணவர்களையும் இளைஞர் – யுவதிகளையும் உரு வாக்க திணைக்களங்கள் தங்களுக்கான அதிகாரங் களை உரிய முறையில் பயன்படுத்த வேண்டியது மிக வும் முக்கியமாகும் – என்றார்.

# ஊரடங்கு நேரம் விளையாடிய 10 இளைஞர்கள் நேற்றுக் கைது

## நாவற்குழியில் சம்பவம்

ஊரடங்கு நேரம் மைதானத்தில் விளையாடிக்கொண் டிருந்த 10 இளைஞர்களை சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்தனர். நாவற்குழியைச் சேர்ந்த இந்த இளை ஞர்கள் அனைவரும் பின்னர் பொலிஸ் பிணையில் விடு விக்கப்பட்டனர்.

பொசன் போயா தினத்தை முன்னிட்டு நேற்றும் இன் றும் நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப் பிக்கப்பட் டுள்ளது. இதனால் நாவற்குழியின் உட்பகுதி யில் இளை ஞர்கள் சிலர் மைதானத்தில் பகல் நேரம் விளையாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அந்தப் பகுதிக்கு சுற்றுக்காவல் வந்த பொலி ஸார் மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த இளை ஞர்கள் அனைவரையும் கைது செய்தனர்.

மைதானத்தின் அருகில் இருந்த வீடுகளைச் சேர்ந்த இளைஞர்களே விளையாடிக்கொண்டிருந்தனர் என் பதால் பொலிஸார் தங்கள் பிள்ளைகளைக் கைது செய்வதை அறிந்து பெற்றோர்கள் அந்த இடத்தில்கூடி, சிறுவர்கள் தெரியாமல் விளையாடிவிட்டார்கள் இனி அப்படிச் செய்ய மாட்டார்கள் அவர்களை விட்டுவிடுங் கள் என்று கேட்ட னர். பொலிஸார் அதற்கு மறுத்ததால் அங்கு சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

இளைஞர்களைப் பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று விசாரித்துவிட்டு அவர்களை பொலிஸ் பிணை யில் விடுவிப்பதாகப் பொலிஸார் உறுதியளித்தைத அடுத்தே பதற்றம் தணிந்த து.

அதன்படி இளைஞர்களைப் பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று விவரங்களைப் பெற்றுக்கொண்ட பொலிஸார் அவர்களைப் பிணையில் விடுவித்த னர்.

அதேநேரம் அவர்கள் நீதிமன்றத்திற்கு வருகை தரவேண்டிய திகதியும் அவர்களுக்கு வழங்கப்பட் டது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.06.2020 இல் வெளியிடப்பெற்றது.